
Chandran

# சிரித்திரு

ஆசிரியர்: 'துரைஸ்'




ஐரோப்பாவின் ஒரேயொரு நகைச்சுவை இதழ்



நீங்கள் மன நிறைவுடன் பொருட்களை வாங்கிச் செல்ல நாடவேண்டிய இடம் :

## சபா அன் சன்ஸ்

இலங்கை , இந்திய பாகிஸ்தான் உபஉணவுப் பொருட்கள் தமிழ் வாரமாத சஞ்சிகைகள் மரக்கறி வகைகள், நண்டு, மீன், சுறா, றால் என்பவும் மற்றும் உங்கள் பாவனைக்குரிய மளிகைப் பொருட்களும் எம்மிடம் கிடைக்கும்.

## SABA AAN SON ( S.A.R.L)

**7, RUE SAINTMARCUERITE**

**48 40 43 68**

(விநாயகர் ஆலயத்திற்கு அருகாமை)

Mo: AUBERVILLIERS 4 CHEMINS

கொண்டாட்ட வைபவங்களுக்குரிய சிற்றுண்டி வகை, உணவு போன்றவை மலிவாக ஓடருக்கு செய்து பெற்றுக்கொள்ளவும்.

# சபா அன் சன்ஸ்

அல்லாவும் ஜேசுவும்
ஆனைமுகக் கடவுளும்
எல்லாமே ஒன்றுதான்
'சிரித்திரு' முன்னாலே
சிந்திக்கத் தெரிந்தோரே
சிரியுங்கள் என்னாளும்.

சிரித்திரு
முகம் : 1
சிரிப்பு : 4
ஆடிமாத இதழ்

கௌரவ ஆலோசகர்:
**எஸ்.எஸ்.குகநாதன்**

பிரதம ஆசிரியர்:
**ஐ. துரைராசா (துரைஸ்)**

ஆசிரியர் குழு:
**எம்.என்.தெய்வேந்திரம்**
**(வண்ணைதெய்வம்)**
**எஸ்.சுரேந்திரன்**
**ஏ.ராகுலன்**
**ரி.தயாநிதி**
**பி.லோகதாஸ்**
**பிலிப் தேவா**

பத்திரிகைத் தொடர்பாளர்:
**கே.கணேசமூர்த்தி**

ஆசிய நாடுகளின் பிரதிநிதி:
**ஜே. மண்டலேஸ்வரன்**
**(இந்தியா)**

ஓவியங்கள்:
**கணேஷ்ராஜ்**
**சாம்சன்.**

சகல தொடர்புகட்கும்:
'SIRITTIRU'
90, PASSAGE BRADY,
PARIS 75010
FRANCE
TEL: 42 47 03 06

சிரித்திருவில் வரும்
அனைத்து விஷயங்களும்
உங்களை சிரிக்கவும், சிந்திக்க
வைக்கவும்
எம் கற்பனையில்
உருவாக்கப்பட்டவையே

ASSOCIATION ARTISTIQUE
AMICALE FRANCO-TAMOULE





நல்லதை செய்யவேண்டும் உள்ளதை சொல்ல வேண்டும் என்று நினைப்பவர் நாம். இந்த அடிப்படையில் நாம் நடிக்கும் நாடகமோ நாம் எழுதும் கட்டுரைகளோ பொதுவான முறையில் தனிப்பட்ட எம் கருத்துக்களை வெளிப்படுத்தி சிரிக்க, சிந்திக்க வைக்க வருவதை எம் அபிமான வாசகர்கள், ரசிகர்கள் நன்கு அறிவீர்கள். இந்த நிலைப்பாட்டை சிலர் தவறாக கருதி தமக்கு குடைபிடிக்கின்றோம் என்று நினைத்து வலம் வருவது வருந்தத்தக்கதே. நம் மண்ணில் ஆரம்பக்கல்வியில் இருந்தே எம் ஆசான்கள் சொல்லித் தந்தது பொதுவாக செயற்பாடு, நீதி, நியாயம், நேர்மைக்கு கட்டுப்பட்டு ஒரு பக்கம் சாராதே, ஓரவஞ்சனை செய்யாதே. இதுவே நல் மனித பண்பு. இப்படியாக வாழ்க்கையை ஆரம்பித்த எமக்கு இடையே வரும் புதுமொழியும் புரியாதது அல்ல. புரியும்..தெரியும்..விசயம் புரியும். நாம் சமுதாயத்தில் சந்தனமாய், கற்பூரமாய், மெழுகுவர்த்தியாய், ஏணியாய், தோணியாய் வாழவேண்டும் என்றே முடிந்தவரை செயற்படுகின்றோம். எம்மைப் புரிந்து கொள்ளுங்கள்..ஓவ்வொருவருக்கும் சுதந்திரம் இருக்கின்றது. அதுவும் இந்த புண்ணிய பூமியில் நிறையவே இருக்கின்றது. நம் நாட்டில் வாழமுடியாத நிலையில் இங்கே வாழ வந்தவர்கள் நாம் என்பதை மறக்காதீர்கள். அங்கும் பயம் இங்கும் பயம் அப்படியானால் எங்கு வரும் சுகம். பாதிக்கப்பட்டவர் நாம் உங்கள் போதிப்பு எமக்கு புறக்குடத்தில் வார்க்கும் நீர் போன்றதே.

நல்லதை செய்ய என்றும் நாம் முடிந்தவரை முன்நிற்கின்றோம். பொதுவான நல்லெண்ணங்களோடு வாழ ஆசைப்படும் எமக்கு யாரும் முத்திரை குத்தாதீர்கள். புதுத்திரை போடாதீர்கள். ஆற்றல் மிக்க அனைவருக்கும் நாம் உறுதுணை புரிவோம். வீண்வேட்டுக்கள் களைய மாற்றங்கள் செய்வோம்.

ஏட்டுச்சுரக்காய்ப் பாணி ஏன் தான் இன்னும், மாற்றவேண்டும் மனங்களே .ஒரு பிள்ளை பிறந்துவிட்டது என்று நாம் சொல்கின்றோம். மிகவும் சாதாரணமாக இதை சொல்விட்டோம். ஆனால் கர்ப்பம் தரித்து வாந்தி எடுப்பதில் இருந்து வயிற்றுவலி வரைக்கும் ஒரு தாய் அனுபவிக்கும் வேதனைகளை எப்படி எடுத்துச் சொல்வது அனுபவித்தவர்கள் பெண்கள் இதை நன்கு உணர்வார்கள் ஏன் மற்றவர்களும் (ஆண்கள்) உணராமலில்லை. இப்படியாக ஒவ்வொரு பிரசவத்திற்கும் நாம் படும் வேதனை தனை சிந்திக்காமல் வீண் விமர்சனங்கள் என்ற வேட்டுக்களால் எமை தாக்காமல் எமை வாழ்த்தாவிட்டாலும் வளரவிடுங்கள் என்று அன்போடு வேண்டுகின்றோம்.

**- ஆசிரியர்**



# கேள்வி ? பதில்கள்

சிவகுமார் , ஜெர்மனி
**துன்பம் வரும்போது சிரிங்க என்று வள்ளுவர் கூறியிருக்கின்றாரே சாவு வீட்டிலும் சிரிக்க லாமா ?**
சிரிக்கலாம் . பணக்கார மாமா மண்டையை. போட்ட அன்று

கே.ரி.சுதர்சன், இவ்றி
**ராகு நான் யாழ்ப்பாணத்து தண்ணீரை இறக்கு மதி செய்து தமிழர்களின் பொருளாதாரத்துக்கு ஊக்கம் கொடுக்க விரும்புகிறேன். தண்ணீரை நான் இறக்குமதி செய்தால் நீங்களும் வாங் குவீர்களா ?**
தம்பி சுதர்சன் கிணத்து தண்ணியோ? குளத்து தண்ணியோ? அறிந்து போட்டுத்தான்?


அதே போல் ஆனையிறவு உப்பையும் நான் இறக்குமதி செய்யலாம் என்று என் நண்பர் கூறுகிறான்.
தம்பி உமக்கு எதிரா சதி நடக்கு ஆனையிற வுக்கை போய் அம்பிட்டுடாதை அத்தோசியம்.

**உங்கள் ஆசிரியரின் தலைமயிர் குறைவைக் கேட்ட நண்பன் அவர் மேல் இரக்கம் கொண்டா ? அல்லது கோபமா?**
இரக்கம்.ஏன் என்றால் தலைமுடி நடுவதற்கு நிதி வழங்கப்போகிறார்.

**பாரிசில் கலைகளும் பத்திரிகைகளும் குடும் பங்கள் சிநேகம் என்று தானே இயங்குகின்றன ஏன் இத்தமிழினம் இவ்விடயத்தில் திருந்திக் கொள்ளவில்லை ?**
நாங்களும் இப்படியே மாறி மாறி கேட்டுக் கொண்டிருப்பம்.

**யானை மார்க் சோடாவை மறக்காத தமிழர் கள் இன்னும் சிங்களமக்களை மறக்கமுடியா மல் இருக்கிறார்களே நாட்டுப்பற்றா ? அல் லது லாபப்பற்றா ?**
அவனவன் A.B.C,லயன்லாகர் எண்டு அலையி றாங்கள். நீர் இன்னமும் சோடாவிலை நிற்கிறீர் பிறாண்டை மாத்துமன்.

**பாரிசில் கலைஞர்களுக்குப் பட்டமளிப்புச் செய்யும்போது கலைஞர்களின் தகுதிக்கும் சிறப்புக்கும் மிஞ்சி அதிகமான பட்டங்களை சூட்டுகிறார்களே ?**
ஏன் பட்டம் கொடுத்து கலைஞர்களை அவமா னப்படுத்தவா அல்லது பட்டம் கௌரவிப்பு என் பது தெரியாமலா?
இதற்காக ஒரு நல்லெண்ணக்குழு ஒன்று தமிழ் நாடு , சிங்கப்பூர், மலேசியா, மொறிசியஸ் , அந் தமான்தீவுக்கு வெளிக்கிட்டு அறிக்கை சமர்ப் பித்த பின்பு இதற்கான பதில் விரைவில் வெளி வரும் புத்தக வடிவில் (தலைசுத்துமே)



என்.ரஞ்சன், எம். தவம் , சென்ற் டேனிஸ்
**பத்திரிகை நடத்துவதற்கு என்ன வேண்டும் ?**
இந்தக் கேள்விக்கு இரண்டு விதமாக பதில் கூறலாம்.
1. பொதுவாக சொன்னால் பேப்பரும் பேனாவும் வேண்டும்.
2. அளவான தலைக்கு அழகான தொப்பிஎன்ற பாணியில் சொன்னால் 'ஐ திங்' நீடிங் பவர் வேண்டும் பிறதர்.



ரி.சிவநேசன் , சுவிஸ்
**நடுநிலை என்றால் என்ன?**
தொட்டிலையும் ஆட்டிவிட்டு பிள்ளையையும் கிள்ளிவிட்டு பேசாமல் இருப்பது



எம்.செல்வராஜா 70 RUE LAFAYETTE , PARIS 9
**அருமையான சீமைச்சரக்குண்டு கைவசம் இரண்டு பேரும் சேர்ந்து அடிப்போமா ?**
தண்ணீரில் நின்று கொண்டே தண்ணீரை தேடு கிறீரே (திருவருள்பயன்)

கே. சாந்தகுமார், பிளொங்மிசல்
**ராகு பொம்பிளை சிரித்தால் போச்சு புகை யிலை விரிச்சா போச்சு என்று பெரியோர்கள் சொல்லியுள்ளார்களே அப்படியானால் பெண் கள் "சிரித்திரு" படிக்கக்கூடாதா ?**
அப்பிடியா மிக்க மகிழ்ச்சி 'சிரித்திரு' வரும் வரையில் பெண்கள் சிரிக்காமல் இருந்திருக்கி றார்களே.




வி.தெய்வேந்திரம் , பந்தன்
**சிரித்திரு ஆசிரியர் சிரித்திரு வெளி வந்த பீறகு சிரிக்கிறாரா ?**
முயற்சிக்கிறார்.

என். சபாரத்தினம், 24 RUE DE LEVIS, PARIS 17
**ராகு அண்ணை அல்லது தம்பி பண்டிக்கேந்தி வருகுது என்று சொல்கிறார்களே அப்படியென் றால் என்ன ?**
பண்டிக்கேந்தியான கேள்வி

ரி.உதயகுமாரன், 86 AVENUE REPUBLIQUE , PARIS 10
**அன்பின் ராகுவே உள்ளொன்று வைத்து புற மொன்று பேசுபவர்களை எப்படி அறிந்து கொள்வது ?**
செலவைப் பாராமல் ஒரு போத்திலை வேண்டிக் கொடுத்துப்பாரும். விளங்கிக்கொள்ளுவீர்.



எஸ்.எம். தனராஜ் , பாரிஸ்
**ராகு உங்களுக்கு இமேஜ் எண்டு ஏதாவது இருக்கா ?**
ராகுவின் இமேஜை கோணேஸ் சாஸ்திரியாரிடம் போய்க் கேளும்.




ஜி. சாந்தி, இவ்றி
**உண்மை அன்பு என்றால் என்ன ?**
இது மூன்றெழுத்து.சமாச்சாரம் சோதரியே அன்பு ! பணம் ! பண்பு! இதில் இறுதியை நான் விரும்பு கிறேன்.

எஸ்.சிவலிங்கம், பிளொங் மிசல்
**பாரிஸில் சுலபமாகச் சம்பாதிக்க ஒரு வழி சொல்லுங்கள் ?**
இந்தியப்படம் 2 - 3 எடுத்து ஓடிப்பாரும் நீர் எங் கேயோ போய்விடுவீர்.

சண்முகநாதன். வில்லியஸ்
**ராகு நீர் பெண் விசயத்தில் படுவீக்காமே?**
பழனி டாக்டர் சித்தவைத்தியர் காளிமுத்துவிடம் மருத்துவம் நடக்கிறது.

நரேந்திரன். ஒபர்வில்லியஸ்
**ராகு பெரும் குடிமகன் என்பவன் யார் ?**
சப்பட்டைக்கு காசைப் போட்டு மாளாமல் முழுசா எடுப்பவரே பெரும் குடிமகன்.



கலைப்பித்தன் , பாரிஸ்
**நான் பரிரிசில் ஒரு பெருவிழா நடத்த உத்தேசித் துள்ளேன். சனம் திரள ஜனரஞ்சகமான ஒரு நிகழ்ச்சிக்கு தமிழ் நாட்டிலிருந்து யாரை அழைக் கலாம்?**
என் அபப்ன் கிருபானந்தவாரியாரும், குன்னக் குடி வைத்தியநாதனும் அழைத்தால் அருள் பாலிப்பார்கள். ரிக்கற்றும் அழியும்

ந.குணேஸ்வரன், இத்தாலி
**ராகு நீங்கள் எங்கே எத்தினையாம் இடத்தில் நிக்கிறீர்கள் ?**
நான் என்ன பி.டி.உசா. அஸ்வினி நாச்சப்பாவே?

சிலோன் லூப்பென், பாரிஸ் 12
**" மோ பிறேயர்" ராகு உம்மை அமெரிக்க சி.ஐ.ஏ. உளவாளி என்று சொல்லுகிறார்கள் பலர் உண் மையா?**
ஆ...தெரிஞ்சு போச்சா

எஸ்.உதயசங்கர் AULANY SOUS BOIS
**உம்மால் பாட்டு எழுதமுடியுமா ?**
ஆ..அவமானம் சின்னச்சின்ன விஷயத்துக்கு கூட ராகுவிடம் முடியுமாவா ? இதற்கெல்லாம் எனது சிஷ்யர்கள் இருக்கிறார்கள். பக்கத் தைப் புரட்டும் மணிப்பாடல் உண்டு.

சி.யோகராஜா..பாரிஸ் 14
**சீட்டு தொடங்க திட்டம் தீட்டியுள்ளேன். உமது ஆலோசனை தேவை?**
முதல் சீட்டு எனக்கு கடைசி வரையும் என் னைக் காணமாட்டீர்

சிறி, ஒபர்வில்லியஸ்
**கவிஞர்கண்ணதாசனுக்கும் கவிஞர் வைரமுத் துவுக்குமுள்ள ஒற்றுமை,வேற்றுமை என்ன ?**
அவர் இறந்து போய்விட்டார். இவர் இருக்கிறார்.

CAFPI
PRÊTS IMMOBILIERS
66, AV. LOUIS-ARAGON - 93000 BOBIGNY
நீங்கள் வாங்கும் வீட்டுக்கு
நாங்கள் கடன் ஒழுங்கு செய்கின்றோம்.
சகல தொடர்புகளுக்கும்
தமிழில் 48 65 95 65

ரங்கநாதன். ஜெர்மனி

**My DEAR ராகு தமிழகத்தை ஆரம்பத்தில் கதாசிரியர்கள் ஆன அண்ணாத்துரை கருணாநிதி ஆண்டார்கள் பின்னர் கதாநாயகன் எம்.ஜி.ஆர். ஆண்டார் இப்போ கதாநாயகி ஆளுகிறார். எப்போ வில்லன் நம்பியாரும் நகைச்சுவை நடிகரும் இசை அமைப்பாளரும் ஒளிப்பதிவாளரும் ஆளுறது ?**

மன்னிக்கவும் வில்லன் நகைச்சுவை அனைத்து வேடங்களும் தான் இப்போது அரங்கேறி வருகின்றனவே. பார்த்து ரசியுங்கள்.

எம்.ராஜ்குமார், ஜெர்மனி

**அன்பின் ராகு ஒரு ஆண் நல்ல மனைவியை எப்படி தெரிவு செய்வது ? ஒரு பெண் நல்ல கணவனை எப்படி தெரிவு செய்வது ?**

தம்பி, ராஜ் பெண் பார்க்க ஆயத்தம் போல கிடக்கு அவதிப்படாதையும் அண்ணன் கைகுடுப்பான்.

அருள்ராஜ், ஒப்பர்வில்லியஸ்

**ராகுவாரே உமக்கொரு சிலை செய்யவேண்டும் உமது படத்தை பிரசுரிப்பீரா?**

நான் ஏற்கனவே இஞ்ச வந்தது அங்கை தெரியாது ஆள் அவுட் என்று அவதிப்பட்டு சிலை வைச்சாச்சு. ஆகவே இரண்டாவது தேவை இல்லை.

எம். ஜெயதேவன் 45 RUE DE BELLEVILLE

**பெண்கள் இதயத்தின் ஆழத்தை அளப்பது எப்படி ?**

ஆனானப்பட்ட அகத்தியரே இந்திரனிடம் தோற்ற பின்பு நான் என்னையா ராகு உமக்கு பதில் தர.


அன்றும்.....இன்றும்....இனி என்றும்.....
தரமான மொழி பெயர்ப்பை
விரைவாக செய்து பெற்றுக்கொள்ள
நாடுங்கள்.......

மாஸ்ரர்

மொழிபெயர்ப்பு சேவை

42463722
90, PASSAGE BRADY 1ம் மாடி
PARIS FRANCE.




(தொலைபேசியில் பாரிசில் உள்ள மருமகன் கொழும்பில் உள்ள மாமியுடன் பேசுகிறார்)

**மருமகன்** : ஹலோ..மாமி..எனக்கு உங்கட மூத்த மகள் கனகாவை கட்டித்தாறம் எண்டு 5 வருஷமா ஆசை காட்டி பரிசுக்கு அனுப்ப எண்டு கொழும்புக்கும் கூட்டி வந்திட்டு இப்பிடி இடையில காசுக்காக மனம் மாறி கனகத்தை கனடாவுக்கு அனுப்பினது எனக்கு நீங்க செய்த படுதுரோகம்.

**மாமி** : டேய் ..தம்பி உதுக்குப் போய் அழுகிறாய். கடக்குட்டி றெடியா நிக்கிறாள். அடுத்த பிளேனிலை அனுப்பி விடுறன்ரா..

சுரேஸ், ஒபர்வில்லியர்ஸ்

**ஓடி ஓடி உழைக்கணும் ஊருக்கெல்லாம் கொடுக்கணும் என்ற பாடலின் தத்துவம் தான் என்ன?**

உமது பாங்கில் O D இல்லாமல் இருக்கத்தான் O D + O D உழைக்கவேண்டும் அன்று எப்பவோ சொல்லிவிட்டார் கவிஞர்.

பி.சந்திரகுமார் 14 RUE BERGERE , PARIS

**பரிசிலை கனபேருக்கு அல்சர் வருகிறது இதற்கு உம்மால் நல்ல மருத்துவ ஆலோசனை சொல்லமுடியுமா ?**

தொடர்ந்து குடலுக்கு வெறு வயிற்றில் தண்ணி பாச்சவும். நல்ல காரமான மிளகாய்த்துாள் பாவிக்கவும். அதற்கும் கட்டுப்படாவிட்டால் தினசரி தனி சிலோன் பச்சைமிளகாய்ள சாப்பிடவும் பலன் கிடைத்தால் பதில் தரவும்.

கே.புவனேந்திரன், சுவிஸ்

**ஐரோப்பாவில் இன்னும் கட்டைப் பிரமச்சாரிகளாக திரியும் ஆண்கள் பற்றி ?**

சும்மா தம்பி முடிக்கேல்லை எண்டு போட்டு அவர் அவர் கொப்பின் (கேள் பிரண்ட்) வைத்திருக்கினம்.

# நம்ம பாக்யாவின்

சித்திரை 'சிரித்திரு' இதழில்....



பாவம் செய்த காய் எது ?
* பாவக்காய்
போதை தரும் காய் எது?
* பீர்க்கங்காய்
வெட்டும் காய் எது?
* கத்தரிக்காய்
அடிபட்ட காய் எது ?
* வெங்காயம்
வழி காட்டும் காய் எது?
* பீட்றூட்
கிழமையுள்ள காய் எது?
* பூ சனிக்காய்
தெய்வமுள்ள காய் எது?
* தக்காளிக்காய்

இரக்கமுள்ள கிழங்கு எது?
* கருணைக்கிழங்கு
குத்தும் கிழங்கு எது?
* முள்ளங்கி
படிக்கமுடியாத பழம் எது?
* நாவல் பழம்
சாப்பிடமுடியாத பழம் எது?
* ஞானப் பழம்

- வண்ணை தெய்வம்



ஜூலை 3-9-92 இதழில்.....

## சுவைக்காய் சேர்த்தவை

☐ பாவம் செய்த காய் எது?
**பாவக்**காய்!
☐ போதை தரும் காய் எது?
**பீர்**க்கங்காய்!
☐ வெட்டும் காய் எது?
**கத்தரி**க்காய்!
☐ அடிபட்ட காய் எது?
**வெங்காயம்**!
☐ வழிகாட்டும் காய் எது?
பீட்ரூட்!
☐ கிழமையுள்ள காய் எது?
**பூசனி**க்காய்!
☐ தெய்வீகமான காய் எது?
**தக்காளி**க்காய்!
☐ இரக்கமுள்ள கிழங்கு எது?
**கருணை**க் கிழங்கு!
☐ குத்தும் கிழங்கு எது?
**முள்**ளங்கி!
☐ படிக்க முடியாத பழம் எது?
**நாவல்** பழம்!
☐ சாப்பிட முடியாத பழம் எது?
**ஞானப்** பழம்!

– பாரீஸ் நகரிலிருந்து வெளிவரும் 'சிரித்திரு' பத்திரிகையிலிருந்து...

# பாக்கியராஜ் சாருக்கு நன்றி

எங்கள் தங்கம் வாத்தியாருக்கு
வாய்நிறையப் புகழ் மாலை
அந்தத் தங்கம் சொன்ன
நம்ம ஆளுக்கு 'சிரித்திரு'வின்
மலர் மாலை...



## ராசுக்குட்டி ஆசைப்படுகிறான்!



தன் அபிமான நட்சத்திரத்தின் உடை, நடை, ஸ்டைல் எல்லாவற்றையும் பின்பற்றுவதில் ரசிகனுக்கு எப்போதுமே ஒரு திருப்தி – மகிழ்ச்சி. அவரோடு சேர்ந்து படமெடுத்துக் கொள்வதில் ஒரு பெருமிதம்! 'ராசுக்குட்டி' தீவிர எம்.ஜி.ஆர். ரசிகன். ஃபோட்டோ ஸ்டுடியோவுக்குப் போய், எம்.ஜி.ஆர். 'கட் அவுட்' பக்கத்தில் நின்று எவ்வளவு குஷியாக 'போஸ்' கொடுக்கிறான் பாருங்கள்!



கவி வடிவில்


கனடா பிரான்ஸ் ஜெர்மன்
கண்டறியா எம்முன்னோர்
கோமணக் கொடுக்காண்டியை
கொண்டாடி மகிழ்ந்த பாட்டி
மேல்நாடு வந்திங்கு
மேனியெங்கும் சாயம் பூசி
கொள்ளுப்பாட்டன் கழுத்திலும்
கொலருக்கு கீழ் ஓர் சுருக்கு பாரீர்.

**-வி.ரி.மயிலழகன்**



# ஐரோப்பிய சிரிப்புகள்









தகப்பன் : ஏனப்பா..பிள்ளைக்கு இந்தக் குத்து குத்துறாய் ?
தாய் :", நான் 'ஷாங் ஷாங்' (பிரெஞ்சில் ஐந்து என்று அர்த்தம்) என்று பிரெஞ்சு சொல்லிக்குடுக்க, அவன் தமிழ் தான் படிப்பன் எண்டு ஐஞ்சு, ஐஞ்சு எண்டு சொல்லுறான்.

-திலக்ஷா

# பலே பாண்டியா







ஆடிமாத குறுக்கெழுத்துப் போட்டி பரிசு வழங்கு பவர்கள்:
**சுமித்திரா உணவகம் 43 55 91 02**

1 ம் பரிசு 200 பிராங்கு
2 ம் பரிசு 150 பிராங்கு
3 ம் பரிசு 100 பிராங்கு



# குறுக்கெழுத்து




**இடம் இருந்து வலம்**
2. தமிழ்மன்னன்
14. சிலருக்கு இது மூக்கின் மேல் இருக்குமாம்
20. இது வாங்குபவரிடம் எல்லாம் சாதிக்கலாம்
28. மாலை போட்டு மாலையேறுவார்கள் இந்த சாமிக்காக
33. அமெரிக்காவை கண்டு பிடித்தவர்
44. சண்டை உண்டாக இதை விடுவார்கள்
51. தனது தலையை எடுத்து வீணை வாசித்தவன்
59. ஒரு நாடு

**மேல் இருந்து கீழ்**
2. ஒரு படத்தின் பெயர்
4. இந்திய சுதந்திர போராட்ட தலைவர்களில் ஒருவர்
8. இவர் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்
31. இராமரின் தம்பி

## நந்தினி





**கணவன்** : உன்னை நான் மனைவியா அடையக் கொடுத்து வச்சிருக்கணும்!


**மனைவி**: அப்பாடா ! இப்பவாவது என் அருமை தெரிஞ்சுதே உங்களுக்கு!

**கணவன்**: சும்மா இரு ! இது தான் ஆபிஸ் நாடகமொன்றில் பேசவேண்டிய வசனம்! -ஜன்றி



**தந்தை**: என்னடா அது ? ஹோம் ஓர்க்கா ? நான் போட்டுத் தரட்டுமா ?

**மகன்**: வேண்டாமப்பா ! நானே தப்பாப் போட்டுக்கிறேன் -ஜன்றி



**மகன்** : அப்பா செவ்வாய் கிரகத்தை பிரெஞ்சு மொழியில் எப்படி சொல்லாம்

**தகப்பன்** : மண்டு, மண்டு, இந்த நாட்டுக்கு நீ வந்து ரெண்டு வருசமாய்ப் போச்சு செவ்வாயை (MARDI) 'மார்தீ' என்று தான் சொல்லுறது உனக்கு தெரியாதா ?

**மகன்** : (Au La La La) ஓலா லா.லா.

.விக்ரர்

**ஆண்குரல்**

சீதனம் கேட்கமாட்டோம்
நாங்கள்...
தாலிகட்டியபின்
கார், பங்களா, ரி.வி, டெக்
என்று நீங்கள்
கேட்-காமலிருந்தால்...


"தமிழாலயம்"

10 - 07 - 92 முதல்

உங்களுக்காக

பாரிஸ் மாநகரில் ஓர் அறிவாலயம்!
அதுவே தமிழாலயம்!!



10 பிராங்



10 பிராங்

* தரமான அச்சு வேலைகள்
* அழைப்பிதழ்கள்
* வாழ்த்து மடல்கள்
* புத்தகங்கள்

ஆகியவற்றை குறைந்த செலவில் அச்சிட்டுப் பெற்றுக்கொள்ளவும்
அனைத்து தமிழ் புத்தகங்களையும் சிறிய கட்டணத்துடன்
படித்துப் பயன்பெறவும்

எழுத்தாளர்களே!
உங்கள் எழுத்துக்களை நூலுருவாக்க

தமிழாலயம்

வாசகர்களே!
அரிய நூல்களைப் பெற்றுக்கொள்ள

அச்சகம் · புத்தகசாலை · நூல் நிலையம்

ஈழநாடு பத்திரிகை, சிரித்திரு சஞ்சிகை
மொத்த விற்பனையாளர்கள்

21 BD. DE LA CHAPELLE,
75010 PARIS.
TEL: 40 05 14 57

முதலாவது குறுக்கெழுத்துப் போட்டியில் பங்குபற்றிய வாசகர்களை விட,இரண்டாவது குறுக்கெழுத்துப் போட்டியில் இரண்டு மடங்கு அதிகமான வாசகர்கள் கலந்து கொண்டதையிட்டு எமக்கு பெரும் மகிழ்ச்சியே.

இருப்பினும் பாதிக்கு மேற்பட்ட வாசகர்கள் சரியான விடையை எழுதாது எமக்கு மகிழ்ச்சியை தரவில்லை.

அது மாத்திரமல்ல சில வாசகர்கள் விடைகளை பலமுறை எழுத்திற்கு மேல் எழுதியதால் அவ் விடைகள் போட்டிக்கு தகுதியற்றது என ஆசிரியர் குழுவால் நிராகரிக்கப்பட்டுள்ளது. இவைகளை தவிர்த்து சரியான விடைகளை எழுதியவர்களுக்குள் குலுக்கல் முறையில் அதிர்ஷ்டசாலிகளாக தெரிவு செய்யப்பட்டவர்கள் முறையே

**முதலாவது பரிசிற்குரியவர்:**
**இரா. மோகன்**
(முகவரி குறிப்பிடவில்லை, தயவு செய்து தொடர்பு கொள்ளவும்)

**இரண்டாவது பரிசிற்குரியவர்:**
**கே.ஜெயந்தி**
3 PLACE DE LA PAIX
93290 TREMBLAYEN
FRANCE.

**மூன்றாவது பரிசிற்குரியவர்:**
**LOUIS JUDY GARLAND**
2 PASSAGE GOIX
75019 PARIS.

இவர்களுக்கு முறையே 150 பிராங், 100 பிராங், 50 பிராங் பரிசாக வழங்கப்படுகின்றது.

இப்போட்டிக்கான இம்மாத பரிசுகளை வழங்குபவர்கள்' **சபா அன் சன்ஸ் மளிகை** ஸ்தாபனத்தார். 48 40 43 68

வாசகர்களே முயற்சியை கைவிடாது தொடரும் குறுக்கெழுத்துப் போட்டிகளிலும் பங்குபற்றி உங்கள் திறமையை வெளிப்படுத்துங்கள்.

## விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கா 1 | ர் | ல் | மா 4 | க் | ஸ் | ■ |
| ங் | ■ | பூ 10 | ரி | ■ | பா 13 | ரி |
| கே | ஏ 16 | ட் | ■ | சா 19 | ர | தி |
| ச | ஷி | போ | ■ | ■ | தி | த் |
| ன் | ■ | ■ | ■ | மே 33 | தா | வி |
| து 36 | வா | ர | கை | ■ | ச | சா 42 |
| றை | ச 43 | கா | தே | வ | ன் | ■ |

வாசகர்களே !
ஒவ்வொரு மாதமும் பத்தாம் திகதிக்கு முன்பு எமக்கு கிடைக்கும் ஆக்கங்கள் அம்மாத இதழிலேயே பிரசுரமாகின்றது.
பத்தாம் திகதிக்கு பின் கிடைக்கும் ஆக்கங்கள் அனைத்தும் எமது அடுத்து வரும் சிரித்திரு இதழில் வெளிவரும்.

**அட்டைப்பட நகைச்சுவை:**

**திரு. எம்.ராஜ்மோகன்**
பிரான்ஸ்

**அட்டைப்பட சித்திரம்:**
**கணேஷ்ராஜ்**




கடிதம்
(பாடசாலை (B) போடிங்கில் தங்கி படிக்கும் மாணவன் தனது தகப்பனுக்கு எழுதிய கடிதம்)
அன்புள்ள அப்பாவிற்கு ! நலம்..நலமறிய இரு நூறு ரூபா அனுப்பி வைக்கவும்.
**- நந்தினி**

## வாசகர் கவனத்திற்கு

ஆசிரியர் அவர்கட்கு !
உங்கள் சிரித்திரு பத்திரிகையின் இரண்டாவது இதழில் நீங்கள் என்னைப்பற்றி வாசகர்களுக்கு நான் அறிந்த மனிதர் என்ற தலைப்பில் விளக்கி எழுதியிருந்தீர்கள். மகிழ்ச்சி
அதே நேரம் 3ம் நூற்றாண்டிற்கு பதில் 300 ம் நூற்றாண்டு என்று எழுதியுள்ளீர்கள். அது என் உள்ளத்தை சிரிக்க வைத்தது. எங்கு போய் தேடுவேன் இல்லாத ஒரு சரித்திரத்தை!
3ம் நூற்றாண்டில் தானே தமிழர்களுக்கும் உள்ள தொடர்பு...
மற்றொரு பந்தியில் (29 ம் பக்கத்தில்) உலக சமாதான ஆராய்ச்சி இல்லம் பற்றி சொல்லி என்னை நல்லவர் வரிசையில் இடம் பெற வாழ்த்தியிருந்தீர்கள். அந்த வாக்கியமோ மிகப் பெரிய வாக்கியம் அதை காப்பாற்ற எனக்கு தகுதியுண்டா? என்று எனக்கு தெரியவில்லை.
உண்மையில் இறைவன் அருளால் என் எண்ணம் நிறைவேறும்
உலகத்தில் சமாதானம் உண்டாகும் என்பது என் கருத்து

**- அன்புடன்**
**வீல் பிரான்ஸ்**

# குரலிசைத்திலகமும், நவரசத்திலகமும் சந்திப்பு




இலங்கையும் இந்தியாவும் கூட்டாகத் தயாரிக்க அதில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனும் இன்னும் பல இலங்கை இந்திய முன்னணிக் கலைஞர்களும் நடித்து வெளிவந்த "பைலட்பிரேம்நாத்" படத்தில் முதன்முதலாக நடித்து, திரையுலகில் காலடியெடுத்து வைத்தவர்தான் சிலோன் விஜயேந்திரன்.

இவரை 05.05.92 சென்னையில் உள்ள கருணாநிதி நகரில் ஒரு நண்பர் வீட்டில் சந்திக்க வாய்ப்பு கிடைத்தது. இவரின் தந்தையின் பெயர் கே.வி. ரெத்தின சபாபதி. இவர் ஒரு ஓய்வு பெற்ற பிரித்தானிய படைவீரர் (லெப்டினன்). இவர் யாழ்ப்பாணத்தில் உள்ள வசாவிளான் என்னும் இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவருடைய தகப்பனார் அதாவது விஜயேந்திரனின் பேரன், இலங்கையில் மங்காப்புகழ் பெற்ற கல்லடி வேலுப்பிள்ளை என்பவராவர். இவரின் தாயார் பெயர் ஜெயசீலி. இவர் மதுரையில் பிறந்து, திரு. ரெத்தின சபாபதியைக் காதல் திருமணம் செய்து கொண்டார். விஜயேந்திரன் 01.03.1946 இல் நாவலப்பிட்டியில் பிறந்து, தன் ஆரம்பக் கல்வியை அப்புத்தளையிலும், பின் சாவகக்சேரி டிறிபேக் கல்லூரி, உரும்பிராய் இந்துக்கல்லூரி என்பவற்றில் படித்து பின் இந்தியாவில் தனது எம்.ஏ.தமிழ் இலக்கியம் முடித்தார். பின்னர் கவிஞன் கம்பதாசன் ஆய்வுக்காக அமெரிக்கா பல்கலைக்கழகம் ஒன்றில் டாக்டர் பட்டமும் பெற்றார். இப்படியாக சிலோன் விஜயேந்திரன் தனது பிறப்பைப் பற்றியும் தனது கடந்தகால மாணவ வாழ்க்கை பற்றியும் என்னிடம் கூறினார். இதுவரை நான் இவரை ஒரு டிநகன் என்று தான் எண்ணியிருந்தேன். ஆனால் அவர் ஒரு கல்விமானும், பெரிய இலக்கியவாதியும் என்பது அவரோடு உரையாடிய பின்தான் எனக்கே தெரியவந்தது. அவருடைய பேரன் தான் கல்லடி வேலுப்பிள்ளை என்று அறிந்ததும் ஆச்சரியப்பட்டேன்.

1960 ம் ஆண்டு கோப்பாய் கலைவளர்ச்சிக் கழகம் அரங்கேற்றிய கட்டபொம்மன் என்ற நாடகத்தில் கொள்ளைக்காரன் வேடம் ஏற்று நடித்தேன். 74 ம் ஆண்டு வரை இலங்கையில் பல நாடகங்களிலும் நடித்து வந்தேன். இலங்கையில் உள்ள நாடக, நடிகர்களுக்கு வருமானம் இத்துறையால் வருவதில்லை. நடிகர்கள் தான் பணம் செலவிட்டு நாடகங்களை அரங்கேற்றவேண்டும் என்ற உண்மை எல்லோருக்கும் தெரிந்ததே. எனக்கு மட்டும் விதிவிலக்கா? 75 ம் ஆண்டில் நவரச நடிப்பு நிகழ்ச்சியை ஆரம்பித்தேன். அதாவது நான் ஒருவனே மேடையில் நவரசங்களையும் ஒவ்வொன்றாக நடித்துக் காட்டுவது. இந்த நிகழ்ச்சியை இன்றுவரை சுமார் 960 மேடைகளில் நடித்துக்காட்டியுள்ளேன். இதனால் எனக்கு சிறிது வருமானம் கிடைத்தது. நடிகர் திலகம் சிவாஜி கணேசன் உலகப்புகழ் பெற்ற சிங்கள டைரக்டர் லெஸ்டர். ஜேம்ஸ் பீரிஸ் ,மறைந்த கலைஞர் எஸ்.வி.சுப்பையா உட்பட பலர் எனது நவரச நடிப்பு நிகழ்ச்சியை பாராட்டி இருக்கிறார்கள். சிவாஜி கணேசனோடு பைலட் பிரேம்நாத் படத்தில் வில்லனாக அறிமுகமாகி 79 ம் ஆண்டு மே மாதம் இந்தியாவிற்கு வந்தேன். இன்று வரை தமிழ், தெலுங்கு. மலையாளம் உட்பட 77 படங்களில் நடித்துவிட்டேன். இவற்றில் 40 படங்களில் குறிப்பிடும் படியான வேடங்கள்

(மறுபக்கம் பார்க்கவும்)



**ஒருவர்**: நீர் ஐசே இந்தியாவிலிருந்து எந்த புத்தகத்திலை இங்கை வந்தனீர்

**மற்றவர்**: (கோவமாக) நானோ தூழல் புத்தகத்திலை


தொடர்.... சந்திப்பு.....

கிடைத்துள்ளன. பைலட் பிரேம்நாத், காதல்கிளிகள், பொலிஸ் பொலிஸ் பொலிஸ், சம்சாரம் என்பது வீணை, குலக்கொழுந்து, பாலநாகம்மா, மன்மதராகங்கள், காவல்(தியாகராஜன்), 7 வது இரவில் (கமலஹாசன்), விடுதலை, கொலுசு (ராஜேஷ்), மனிதன் (ரஜனி), பொல்லாதவன் (ரஜனி) போன்றவை நான் நடித்த படங்களில் குறிப்பிடத்தக்கவை. சில சமயங்களில் எனது திறமைக்கு மதிப்புக் கிடைப்பதில்லை. சில சமயங்களில் கிடைத்த சந்தர்ப்பமும் பறிக்கப்படுகின்றது. வியாபாரம், உத்தியோகம் போன்ற வழிகளில் எனது வாழ்வை வளம் படுத்தலாம். ஆனால் கடைசிவரை கலைஞனாகவே வாழவேண்டும் என்ற வைராக்கியத்தில் கலைஞனாக இருந்து வாழ்க்கையுடன் போராடி வருகின்றேன். எனக்கு 46 வயதாகியும் இன்னும் திருமணம் செய்து கொள்ளவில்லை. காரணம் நான் கலையின் மீது கொண்டுள்ள அன்பு குறைந்துவிடும். அதனால் கடைசி வரை கலைஞனாக இருக்கமுடியாமல் போய்விடும் என்ற பயம் தான்.

60ம் ஆண்டு நடிப்புத்துறையில் காலடி எடுத்து வைக்கும் போதே எனது இலக்கிய வாழ்க்கையை ஆரம்பித்தேன். தமிழ்நாடு, கலைச்செல்வி போன்ற பத்திரிகைகளில் கவிதைகள் சிறுகதைகங்ள போன்றவற்றை எழுதி வந்தேன். இலங்கையில் அவள் என்னும் நாவல், அண்ணாத்துரை என்று ஒரு மானிடன், பிரேமத்தியானம், வசனகாவியம், சௌந்தர்ய பூஜை, சிறுகதைத்தொகுதி, ஆசுக்கவிகல்லடிவேலுப்பிள்ளை வரலாறு, விஜயேந்திரன் கதைகள் உட்பட பல நூல்களை எழுதி இலங்கையில் வெளியிட்டேன். அதுமட்டுமன்றி வைகறை, விஜியா, நடிகன் ஆகிய பத்திரிகைகளுக்கும் ஆசிரியராகவும் இலங்கையில் இருந்திருக்கிறேன். கம்பதாசன் வாழ்க்கை வரலாறு நூலையும் அவருடைய கதைகள் , கவிதைகள், காப்பியங்கள் , நாடகங்கள் தொகுத்து பல நூல்களையும் வெளியிட்டுள்ளேன். இதனால் தமிழ்அறிஞர்களின் பாராட்டையுட் பெற்றுள்ளேன். எனது கவிதைகளை சிலோன் விஜயேந்திரன் கவிதைகள், நேசக்குயில் ஆகிய தலைப்புகளில் வெளியிட்டுள்ளேன். ஈழத்துக்கவிதை ஆற்றலை இனம் காட்டும் வண்ணம் ஈழத்தின் மிகச்சிறந்த 80 க்கும் மேற்பட்ட கவிஞர்களின் கவிதைகளைத் தொகுத்து ஈழத்துக் கவிதைக்கனிகள் என்ற ஒரு பெரிய நூலை அண்மையில் வெளியிட்டேன். இலங்கை இலக்கியங்களையும் தமிழ்நாட்டில் அறிமுகம் செய்யும் விதமாக சில நூல்களை வெளிக்கொண்டு வர பெரும் முயற்சியில் தற்போது ஈடுபட்டிருக்கிறேன் என்று சொல்லி சிலோன் விஜயேந்திரன் தனது கலை இலக்கிய வாழ்க்கையை என்னிடம் சொல்லி முடித்தார்.

இவர் முயற்சிகள் வெற்றி பெறவும் அவரின் கலை,இலக்கியம், பொருளாதாரம் மேலும் உயர அவரை வாழ்த்தி அவரிடமிருந்து விடைபெற்றேன்.●

"சந்திப்பு" மண்டலேஸ்வரன்



உவமையோ? உவமை

எழுத்தாளன் ஒருவனை வாசகன் தேடி வந்து அவர் எழுதிய கதையில் உள்ள குறைநிறைகளைப் பற்றி விமர்சனம் செய்தான்.

அந்த வாசகனின் விமர்சனத்தை தாங்கமுடியாத எழுத்தாளன் கோபத்துடன்

"என்னுடைய கதையை விமர்சிக்க உனக்கு என்ன தகுதி இருக்கின்றது" என்று கேட்டார்.

"எனக்கு படிக்கத் தெரியும். உங்கள் கதையை படித்ததால் விமர்சிக்கிறேன்" என்றான் வாசகன்.


"படிக்கத் தெரிந்தவன்படிப்பதோடு நிறுத்திக் கொள்ளவேண்டும். படைக்கத் தெரிந்தவன் தான் மற்றவனுடைய படைப்பை விமர்சிக்கலாம்" என்று கூறினான் எழுத்தாளன்.

அதற்கு வாசகன் கூறினான்"நீங்கள் சொல்வது தவறு எங்கள் வீட்டில் பல கோழிகள் இருக்கின்றன. அவை எல்லாம் நன்றாக முட்டை இடுகின்றன. அவைக்கு முட்டையிட மட்டும் தான் தெரியும். அந்த முட்டையின் சுவை பற்றி கோழிக்கு தெரியுமா ? அதை மேலும் எப்படி சுவையாக சமைக்கவேண்டும் என்பது சாப்பிடும் எங்களுக்குத் தானே தெரியும்.

"நீங்கள் போட்ட கதை என்ற முட்டை ருசியானதா இல்லையா என்பது சாப்பிட்ட எங்களுக்குத்தானே தெரியும்" என்றான்.

எழுத்தாளன் முகத்தில் அசடு வழிந்தது.

-நந்தினி



தகப்பன்: ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதிரை, நல்வழி போன்ற பயனுள்ள புத்தகங்களை யார் தம்பி எழுதினார்கள்

மகன்: சந்திக்கடை கந்தசாமி

தகப்பன் : ஏனடா அப்படி சொல்கிறாய்

மகன்: அவர் தான் இத்தனை புத்தகங்களையும் தன்ரை கடையில வைத்து விற்கிறார்.

# மலர்களே மலருங்கள்!



பிரான்ஸ் PORTE ST OUEN வாழும் ஜெயச் செல்வம் தம்பதிகளின் செல்வப் புதல்வி அர்ச்சனா 17.06.92 இல் தனது 3 வதுபிறந்த நாளைக் கொண்டாடினார். இவர் பல்கலையும் செல்வமும் பெற்று நீடூழி வாழ அண்ணா பாசநேசன் வாழ்த்துகின்றார்.



பாரிஸ் 17 இல் வசிக்கும் லோகேஸ்வரன் - சசிகலா தம்பதிகளின் செல்வப்புதல்வன் 'சந்துரு' 18.06.1992இல் தனது 3 வது பிறந்த தினத்தை அக்கா "சரண்யா"வுடன் கொண்டாடினார். பல் கலையும் கற்று வாழ 'சிரித்திரு' வாழ்த்துகின்றது.

பிரான்ஸ் ST. MAUR இல் வசிக்கும் சிவானந்தன் யசோதா தம்பதிகளின் புதல்வி ஜனனி 07.07.92 இல் தனது 1 வது பிறந்த நாளைக் கொண்டாடினார். இவர் பல்கலையும் செல்வமும் பெற்று நீடூழி வாழ சிரித்திரு வாழ்த்துகின்றது.



பெயர்:..........................................


பிறந்த திகதி:..........................................

முகவரி:..........................................

..........................................

'சிரித்திரு சிறுவர்களே' இப்பகுதி உங்களுக்காக

கடந்த மாதம் பிறந்த நாளை கொண்டாடிய 10 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் உங்கள் படத்துடன் கீழே உள்ள கூப்பனையும் இணைத்து அனுப்பினால் நாம் இலவசமாக பிரசுரிப்போம்.




(ஒரு கலைவிழா மேடையைப் பார்த்து ரசிகர்கள் உரையாடல்)

**ஒருவர்** : இண்டைக்கு மேடையில நாலைஞ்சு பேருக்கு குத்துவிளப் போகுதெண்டு வெளியில கதைக்கிறாங்கள்

**மற்றவர்** : என்னடாப்பா இப்பிடிச் சொல்லுறாய் இண்டைக்கெண்டு பிள்ளை குட்டியளோட வந்திட்டன். விழாவுக்கு...

**ஒருவர்** : என்ன விளங்காமல் கதைக்கிறீர்..நான் சொல்ல வந்தது மேடையிலை கலைஞர்களுக்கு தங்கப்பதக்கம் குத்தப் போவதெண்டு கதைக்கிறாங்கள்.



(இறைவனைப்பற்றியும், மோட்சத்தைப் பற்றியும் பிரசங்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது கூட்டத்தில் இருந்த ஒரு நாஸ்திகர் எழுந்து)

**நாஸ்திகர்** : ஐயா..பிரசங்கியாரே...நான் மோட்சத்திற்கு 'இமிடியட்டாக' போறதுக்கு ஒரு வழி சொல்லுங்கோ...

**பிரசங்கியார்**: செபத்தியான்ர காரில ஏறு. உடனடியாய் போயிடுவாய்...


ஐரோப்பாவில் வாழும் தமிழ் மக்கள் பற்றிய செய்திகள், பயனுள்ள தகவல்களுடன்
விரைவில் வெளிவருகிறது!

தமிழ்நேசன்
TAMILNESAN

ஐரோப்பிய நகரங்கள் எங்கும் நிருபர்கள் தேவை

யாழ்ப்பாணத்திலும், ஐரோப்பாவிலும் பத்திரிகைப் பணியாற்றிய பத்திரிகையாளர்களின் முயற்சியில் வெளிவருகிறது.

தொடர்புகளுக்கு:
90, PASSAGE BRADY, 75010 PARIS, FRANCE.



*இசைப்பிரியர்களே....*
*உங்கள் மங்கள வைபவங்களா? கலை நிகழ்ச்சிகளா?*
*அழைத்து மகிழுங்கள் பாரிஸ் "இளையநிலா" இசைக்குழு*

சிரித்திரு
42 47 03 06






கான் திரைப்பட விழாவில்

"கௌபோய் கணபதி.ப்பிள்ளையின் கலாட்டாவும் வாய்வெட்டு வள்ளியம்மையின் வாலாட்டமும் சாறிவாயாட்டமும்"

ஏன் எங்களுக்கில்லை விருந்து சாறீ விருது என்று கௌபோய் கணபதிப்பிள்ளை கலாட்டா செய்து வாய்வெட்டு வள்ளியம்மை வாலாட்ட சாறீ வாயாட்ட கான் திரைப்படவிழா முடிவில் பெரும் பெரும் கூழ்அப்பங்கள் மன்னிக்கவும் குழப்பங்கள் பறந்தன. இதோ, எங்கள் நிருபர் கம்பி இல்ல தும்பி புரட்டி திரட்டி உருட்டி தருகிறார்.

அண்மையில் கான்திரைப்படவிழா நடந்தது அனைவருக்கும் தெரிந்ததே. இவ்விழாவில் உலகத்திலுள்ள எல்லாமொழிப் படங்களும் திரையிடப்பட்டது. அதில் எமது முன்ஆணி மன்னிக்கவும் முன்னணி நடிகமுனி நடிகமணி கௌபோய் கணபதிப்பிள்ளை வாய்வெட்டு வள்ளியம்மை இணைந்து நடித்த படமான கழிசான் கனவுகள் படமும் இத்திரைப்படவிழாவில் திரையிடப்பட்டது. ஆனால் விருது கிடைக்கவில்லை என்பது தான் குழப்பத்துக்கு மெயின் காரணம். இப்படம் கானில் விருது பெறும் என்று பெரும் எதிர்பார்ப்புடன் தான் கௌபோய் கணபதிப்பிள்ளை வந்திருந்தார். ஆதலால் கதிரையை விட்டு எழும்பினார்.குழம்பினார்.குளப்பினார்.புலம்பினார் தமிழால் முழங்கினார். இதனால் அதிர்ச்சியடைந்த மேலநாட்டு நடிகர்கள் அலன் டெலன், பெல்மொண்டோ சாள்ங் ப்ரோண்சன் கணபதிப்பிள்ளைக்கு கிட்டை சென்று என்ன விடயம் என்று கேட்டபோது அவர்களை கணபதிப்பிள்ளை அவிச்சஇறால் போல் இருந்து கொண்டு என்னுடன் கதைக்க வராதீர்கள்.இப்படி சொன்னதும் கோவம் அடைந்த பெல் மொண்டோ கௌபோய் கணபதிப்பிள்ளையைப் பார்த்து சரக்கட்டை போல் நீர் இருநுத கொண்டு எங்களைப் பார்த்து அவிச்சஇறால் எண்டுநீர் என்றதும் கோவம் அடைந்த கௌபோய் கணபதிப்பிள்ளை கதிரையை துாக்கி நிலத்தில் அடித்து உடைத்து என் விலாசங்ம தெரியுமா உனக்கு சீ உங்களுக்கு எல்லோருக்குமென்று அட்டகாசம் செய்யத் தொடங்கினார். உடனே பெல் மோண்டோ தனது கைத்துப்பாக்கியை எடுத்து விரலில் வைத்து இரண்டு சுத்து சுத்திப்போட்டு அத்துப்பாக்கியால் தலையை சொறிந்தார். துப்பாக்கியைப் பார்த்து கொஞ்சம் பயந்த கணபதிப் பிள்ளை தன்ரை பயத்தைக் காட்டிக் கொள்ளாதவாறு தன்மடியில் இருந்த வில்லுக்கத்தியை எடுத்து விரித்து வீசிக்காட்டினார். இதில் குறுக் கிட்ட வாய் வெட்டு வள்ளியம்மை பெல்மொண்டோவை பார்த்து இல்லை நீ சுட்டுப் போடுவியோ எங்கடை கதாநாயகன் கணபதிப்பிள்ளை என்று தனது சேலைத்தலைப்பை நாரிக்குள் செருகிக் கொண்டு கேக்க பெல்மொண்டோதன் கைகளுக்கு ஒரு முத்தத்தை கொடுத்து வள்ளியம்மையை நோக்கி ஊதிவிட்டார். உடனே வாய் வெட்டு வள்ளயிம்மை தன் இதழ்களுக்கு பெல் மொண்டோவால் அளிக்கப்பட்ட முத்தம் என்று எண்ணி மெய்மறந்து இருந்து விட்டார். இதை துாரத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த ஈழ நாட்டு நிருபர் ஓடிவந்து என்ன விசயம் என்று கௌபோய் கணபதிப்பிள்ளையை கேக்க அவரைப் பார்த்து நீ கிட்டவராதே ஏற்கனவே எனக்கு







கண்ணே மணியேயென
காதல் கதை பேசுமாடவர்
பொன்னும் மணியும் தேட
புதிய யுக்தி கண்டனரோ
இல்லையென்று சொல்லி மங்கை
எதிர்வந்து நின்று விட்டால்
இழவே சனியனே என்று
கண்ணே மணியென்றவர்
கசந்தல்லவா நிக்கின்றார்?
**-வி.ரி.மயிலழகன்**

வெறிக்கிறது எண்டார் இப்படி குழுப்பத்தில் இருக்க திரைப்படவிழா நடத்தியவர்கள் ஓடிவந்து நிறுத்துங்கள் கலைஞர்களுக்கு போட்டி தேவை தான் அதுக்காக பொறாமை தேவையில்லை. பெல்மொண்டோவையும் கௌபோய் கணபதிப் பிள்ளையையும் பார்த்து உங்கள் ஆயுதங்களை போடுங்கள் எண்டார் உடனே பெல்மொண்டோ தன் ஆயுதத்தை கீழே போட்டார் அது உண்மை துப்பாக்கியல்ல.சிறுபிள்ளைகள் விளையாடும் தண்ணித்துவக்கு என்பது பிறகு தான் எல்லோருக்கும் தெரிய வந்தது. அடுத்து கௌபோய் கணபதிப்பிள்ளை தனது ஆயுதத்தை போட்ட வண்ணம் சொன்னார் ஆயுதத்தை முதலிலை எடுத்தது பெல்மொண்டோ தான் அவர் தான் சிலவிசயங்களை புரிந்து கொள்ளவேண்டும் என்று உடனே பெல்மொண்டோ புரிந்தது புரியாதது தெரிந்தது தெரியாதது அனைத்தும் அறிவோம் அது பற்றி அற்வைஸ் நமக்குத் தேவையில்லை. உடனே கௌபோய் கணபதிப்பிள்ளை திருவிளையாடலில் சிவாஜி பேசின வசனத்தை கொப்பியிடிச்சா எனக்கு பேசுறாய் எண்டா விழா அமைப்பாளார்கள். இருவரையும் மோதவிடாமல் நீங்கள் இருவரும் மோத இதுவல்ல இடம் அதற்கு நாங்கள் நடிகக்த் தருகிறோழ் நல்ல படம் என்ற உடனே அமைதி நிலவியது. ஆனால் கௌபோய்கணபதிப்பிள்ளை விழா அமைப்பாளரைப் பார்த்து ஏன் என்படத்துக்கு விருது இல்லயைண்டு கொதித்தார். அவர் காலில் மிதித்தார் எதற்கும் கூல் கூல் ஓய் நாங்கள் குடிக்காத கூழா. நீ எதைச் சொல்லிக் கொண்டிருக்கிறாய். இல்லை நான் உங்களுக்கு கூல் ரிங்ஸ் ஓடர் பண்ணியிருக்கிறன் எண்டார் எனக்கு கூல் ரிங்ஸ்வேண்டாம்.. சப்பட்டையெண்டால் சவா ஆனால் இந்த பிரச்னை கதைக்காமல் போத்தில் திறக்கமாட்டேன் என்றார். விழா அமைப்பாளர் உங்கள் பிரச்னை என்ன கேக்க எனது படமான கழிசான் கனவுகள் எவ்வளவு யதார்த்தமான படம் அதில் வரும் ஒரு காட்சியை கூட கழிக்கவும் முடியாது கூட்டவும் முடியாது என்றார். அப்பிடிப்பட்ட படத்திற்கு நீங்கள் விருது வழங்காமல் சும்மா இந்த பெல்மொண்டோவின் மசால படத்திற்கு விருது வழங்கியுள்ளீர்கள் என்றார். உண்மை தான் உங்கள் படமான கழிசான் கனவுகள் ஒரு யதார்த்தமான படம் தான். ஆனால் அதில் வரும் ஒரு காட்சி தான் உங்கள் படத்தின் விருதையே இல்லாமல் செய்தது. அப்பிடி என்ன காட்சி அதாவது நீங்களும் வாய்வெட்டு வள்ளியம்மையும் முத்தமிட்டு தாம்பத்தியம் கொள்ளும் காட்சியை சிம்பொலிக்காய் ஒரு ஆண்நாயும் பெண்நாயும் சந்தியில் நின்று தாம்பத்தியம் கொள்வதாக அமைத்திருந்தீர்கள். அந்த காட்சியை நாய்களை காட்டாமல் நீங்களும் வாய்வெட்டு வள்ளியம்மையும் தாம்பத்தியம் கொள்வதாக காட்டியிருந்தால் அது யதார்த்தம். அது மட்டுமல்ல ஒரு முத்தக்காட்சியில் வாய்வெட்டு வள்ளியம்மை தனது வாயை வெட்டி வெட்டி கிட்டே வரும்போது நீங்கள் கொடுக்கும் முத்தம் ஒரு திருப்தியின்மையாக இருக்கிறது. அந்த முத்தக் காட்சியில் வாய்வெட்டு வள்ளியம்மையின் முகத்தில் நீங்கள் முத்த முத்திரை பதித்து இருக்கவேணும் இதுகளை கேட்டதும் ரென்சனாகிய கௌபோய்கணபதிப்பிள்ளை சப்பட்டையை பறித்து பச்சையாக அடித்துவிட்டு சரி. அடுத்த படத்திலை காட்டுறன் என்ரை விளையாட்டை என்று கூறும்போது நமது மதிப்பிற்குரிய பத்திரிகையான "பாரிஸ் ஈழநாடு"வின் சார்பில் 45 ஆண்டுகளில் முதல்முறையாக கலந்து கொண்ட தமிழ் பத்திரிகை நிருபர் அவரை சந்தித்து ஆறுதல் கூறி அமைதிப்படுத்தினார். ●

**-லோகன்**




(ஒரு எம்.ஜி.ஆர் ரசிகர் 'நாடோடி மன்னன்' படத்தில் எம்.ஜி.ஆர் மூக்கில் விரலை வைத்து...ம்...ஆ என்று பாரிஸ் வீதி ஓரத்தில் செல்லும்போது அருகே வந்த ஒருவர்)

**ஒருவர்** : அண்ணே இந்த இடத்தில நிண்டு மூக்கில விரலை வைத்து ..ம்..ஆ..என்று செய்யு நீங்கள்.என்ன விஷயம்.

**மற்றவர்**: தம்பி நம்ம நாடோடி மன்னன் எம்.ஜி.ஆர் ஸ்ரைல்...

**ஒருவர்**: இப்படி நீங்கள் 'சொல்லுறீங்கள் பிரான்ஸ் பொலிஸ் கண்டால் பவுடர் (தூள்) விற்க சாம்பிள் காட்டுறீங்க என்று நினைச்சு உள்ள போடப் போறாங்கள்.



**மனைவி** : பரிசுக்கு நீங்கள் வந்து பத்து வருசமாய்ப் போச்சு பெரிசாய் என்னத்தை சாதிச்சியள்

**கணவன்** : அது தானே ஆசைக்கொண்டு, ஆஸ்திக் கொண்டு அப்பிடியே அலெக்கேஷனுக்கும் ஒண்டெண்டு மூண்டைப் பெத்து வைச்சிருக்கிறன் தெரியேல்லையே?

# வாழ்த்துகின்றோம்

## 13 வயதில் பட்டதாரியான இலங்கை தமிழ்ச் சிறுவன்

*(லண்டன்)*
*பிரிட்டிஷ் பல்கலைக்கழகம் ஒன்றில் தமது 13-வது வயதில் கணிதவியல் துறையில் பட்டம் பெற்றுள்ள இலங்கைத் தமிழ் மாணவர் ஒருவர் பிரிட்டனில் புதிய சாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளார். இந்த சாதனையின் மூலம் பிரிட்டனில் மிகவும் குறைந்த வயதில் பட்டம் பெற்ற முதலாவது மாணவர் என்ற பெருமையையும் உலகின் இரண்டாவது வயதில் குறைந்த பட்டதாரி என்ற பெருமையையும் பெற்றுள்ள இலங்கைத் தமிழ் மாணவரான செல்வன் கணேஷ் சிற்றம்பலம் தாம் பிறந்த மண்ணுணுக்கு பெரும் புகழைத் தேடித் தந்துள்ளார்.*




*பிரிட்டனின் வயதில் குறைந்த பட்டதாரியான ஈழத்து தமிழ் சிறுவனுக்கு "சன்" பத்திரிகை கௌரவ ஆசிரியர் பதவி வழங்கிக் கௌரவித்தது.*

நன்றி :பாரிஸ் ஈழநாடு



**சிந்தனைச்சிரிப்பு**

**ஒருவர்**: மச்சான் பக்கத்து வீட்டுக்கார வேலு பெரிய லெவல் கதையெல்லாம் கதைக்கிறார். அவற்றை மனிசி 2 மாதம் எண்டு அவருக்கு நான் சொல்லித்-தான் தெரியும்.

**மற்றவர்**: என்ன மச்சான் குழப்பிறாய்.


**ஒருவர்**: இல்ல மச்சான் டாக்டர் சொல்லித்தான் எனக்கும் தெரியும்

**மற்றவர்**: என்ன மச்சான் இப்படிச் சொல்லுறாய் நான் உன்னிலை எவ்வளவு மரியாதை வைச்சிருந்தன் நீ என்டாண்டா?

**ஒருவர்**: டேய் மச்சான் விளங்காமல் சீரியஸ்படுத்தி கதைக்கிறாய்...வேற ஒண்டுமில்லை எல்லாம்பாசைப்பிரச்னை தான்.


**மற்றவர்**: அட கடவுளே..அப்படி சொல்லு விசயத்தை.

-ராசன்




**ஒருவர்** : என்ன ? மேடையிலை சிரித்திரு ஆசிரியருக்கு யாரோ பொன்னாடை போர்க்க போர்க்கவேண்டாம் எண்டு அடம் பிடிச்சாராம்?

**மற்றவர்** : சமர் ரைம் என்றபடியால் அவர் ஏற்கனவே வெய்யில் வெக்கையில் வேர்த்தொழுகிப்போய் நிண்டவர் அது தான் போர்க்கவேண்டாமெண்டுட்டார், வின்ரர் ரைம் எண்டால் பேசாமல் போர்க்கவிட்டிருப்பார் எண்டு நினைக்கிறன்.



**ஒருவர்**: என்ன செல்லக்குஞ்சி அம்மான் சாராயப் போத்தில்களை தூக்கேலாமல் தூக்கிக் கொண்டு போறார்.

**மற்றவர்**: ஊர்க்குடிகாரர்கள் எல்லாரும் சேர்ந்து சாராயச்சீட்டு போட்டவை. அதிலை இந்த முறை அம்மானுக்குத்தான் சீட்டு விழுந்திருக்காம்.



**கட்சிக்காரர்**: என் மீது போடப்பட்டிருக்கும் வழக்கு எப்பங்க முடியும் ?

**வக்கீல்**: எனக்கு மூன்று மணி நேரத்திலும் உங்களுக்கு மூன்று வருடத்திலும் முடியும்.




(இருவர் தவறணையில் தண்ணி அடித்துவிட்டு போதையில் உரையாடுதல்)

**சிவம்**: சுந்தரம் டேய் ஆனைக்கோட்டையில கள்ளடிச்சால் கொழுவத்தான் வேணும்

**சுந்தரம்**: ஆ...என்ன சொல்லுறியள்.

**சிவம்**: ஓம் கொழுவத்தான் வேணும்.....புளாவை.


**- கிருஷாந்தன்**



**காதலி**: எங்கப்பா என்னை திருமணம் செய்பவருக்கு கார் வாங்கி தருவதாகச் சொன்னார். ஆனால் இப்போ மறுத்துவிட்டார்.

**காதலன் (மோகன்)**: எதற்காக இப்போ மறுக்கின்றார்.

**காதலி**: நான் குமாரைக் காதலிக்கும் போது தான் அப்படிச் சொன்னார். அதனால் தான் இப்போ மறுக்கிறார். **- எம்.எஸ்.நாதன் -**




மொட்டை மாடியில்
எட்டிப் பார்த்தேன் சாம்பல் தட்ட
வைக்கோல் ஏற்றி - வண்டியில் போச்சு
காலைக் கதவைத்
தட்டிய பேப்பர்
மூணாம் பக்கம்
முக்கால் அழுதது -வைக்கோல்
வாகன விபத்துத் தீயில்
கருகிய பிணங்களில்
கன்னி ஒருத்தி !
படவா..ராஸ்க்கல்
யாரோ ?...எவரோ?...
அன்று விட்டேன்
சிகரட் பழக்கம்
ஆனால் இப்போ
பைப் தான் வசதி!
அந்தஸ்தும் உண்டு!
ஆபத்தும் இல்லை!

**- கணேஷ் -**

**கண்டதும் கேட்டதும்**

"பாரிஸ் ஈழநாடு"வின்
முதலாவது ஆண்டு நிறைவு விழாவில்

பாரிஸ் ஈழநாட்டின் முதலாவது ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சியில் ஒன்றான வழக்காடு மன்றம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. சட்டத்தரணிகள், பெற்றோர்கள் கண்டிப்பாக பிரெஞ்சு மொழிபடிக்கவேண்டும் என்றும் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு கண்டிப்பாக தமிழ்மொழி கற்பிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி விவாதித்துக் கொண்டிருந்தார்கள்.
அடிக்கடி பெற்றோர்கள் என்ற வார்த்தை அங்கு பாவிக்கப்பட்டது.
இதனைக் கேட்டுக் கொண்டிருந்த எனக்குத் தெரிந்த நண்பரின் சின்னமகன் (வயது 13) பெரியவனிடம் (வயது 15) கேட்டான். "பெற்றோர்கள், பெற்றோர்கள் என்று பேசிக்கொள்கிறார்களே பெற்றோர்கள் என்றால் என்ன " என்று பெரியவனுக்கும் அதன் அர்த்தம் தெரியவில்லை பின்பு தாயிடம் விளக்கம் கேட்டார்கள். தாய் பெற்றோர்கள் என்று குறிப்பிடுவது பப்பா, மம்மா என்று விளக்கம் கூற அதன்பின் தான் பிள்ளைகளுக்கு பெற்றோர் என்றால் யார் என்பது தெரிந்தது.
**தகவல் : யூட்**
இனியாவது பிள்ளைகளுக்கு தமிழ் கற்றுக் கொடுப்பீர்கள் என நம்புகின்றோம்.
(ஆ-ர்)



**ஒருவர்** : இவர் என்ன காரில வந்து இறங்கினார். பிறகு கார் றேடியோவை கழட்டிவைச்சு சுத்திக் கொண்டு நிற்கிறார்.

**மற்றவர்** : உமக்கு விஷயம் தெரியாதே . இந்த வீட்டை சுத்தி மேலே இருக்கிறவங்கள் றேடியயோ கள்ளராம். இவர் இப்படி றேடியோவைச் சுத்தினால் கார்சீற்றுக்குக் கீழே றேடியோவை நான் வைக்கேல்ல கையில கொண்டு போறன். வீணாக றேடியோ இருக்கெண்டு கண்ணாடிகளை உடைக்காதே எண்டு ஜாடை மாடையாய் வெளிப்படுத்துகிறார்.

- முல்ஹவுஸ் 'தவம்'



**நல்லூரடி BOY**

என்ன நாரதர் வழக்கமான உங்கடை தம்பூராவை விட்டுட்டு இந்த முறை கிற்றாரோடையும் கீ போட்டடேயும் வந்திறங்கியிருக்கிறியள்

**நாரதர்**: அதையேன் கேக்கிறீர் உம்மட பாட்டுக்கு என்ரை பழைய தம்பூராவை வைச்சு தாக்கேட்டேலாமலிருக்கு அதுதான் இதுகளோடை வந்திருக்கிறன். அது சரி மெற்றோவுக்குள்ளை இறங்கி போற அந்த சீனுவாக்காரியைப் பார்த்து சிங்களத்து சின்னக்குயிலே மெட்டில் ஒரு பாட்டை இழுத்துவிடு...

"அப்பிடியா இந்தா பிடியுங்கோ நாரதரே.....
"சீனுவா சின்னக் குமரே
உன்ரை மந்திரத்தை சொல் மரையே
சங்சோங்சங்..சங்சோங்சங்
ஸ்வாசோங்..சங்
அன்பே நீயின்றி அடைகடைபூட்டாது
மானே நீயின்றி மக்டொனால்ஸ் திறக்காது
இவன் உன்னை உறவாட உதவாப் பொடியன்
ஆனால் வயதுக்கு வந்த பெரும் தடியன்-
ஆனாலும்
மனம் தூங்காமல் தூக்கி போட்டிடுதே
ஏய்..ஏய்...சிங்...சோங்...கிங்


'சிரித்திரு' அறிமுகப்படுத்தும் 12 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் கலந்து கொண்டு பரிசு பெறும் புதிய பகுதி

**'விநோத உடைப்போட்டி'**

1) உங்களின் பிள்ளைகளுக்கு விநோதமான முறையில் உடையணிவித்து அழகிய முறையில் புகைப்படம் எடுத்து எமக்கு அனுப்பி வையுங்கள்.

2) சிறந்ததாக ஆசியர் குழு தெரிவு செய்யும் முதல் மூன்று புகைப்படங்களுக்குரிய சிறுவர்களுக்கு வயதிற்கு ஏற்ற பெறுமதியான பரிசுகள் வழங்கப்படுவதுடன் உங்கள் அபிமான பத்திரிகையான "பாரிஸ் ஈழநாடு" விலும் பிரசுரிப்போம். நீங்கள் அனுப்பும் புகைப்படத்துடன் இந்த கூப்பனையும் மறக்காமல் இணைத்து அனுப்பவும்.

**"விநோத உடைப்போட்டி"**
பெயர் :.........................................................
முகவரி:.........................................................
...................................................................
வயது :.........................................
நாடு :.........................................




நான் ஒரு சிரித்திரு வாசகன். ஐரோப்பிய நாட்டில் ஓர் தரமான சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் வார்த்தைகளால் கோர்க்கப்பட்ட கருத்துக்களை பத்திரிகை மூலமாக முன்வைப்பதையிட்டு பெரிதும் மகிழச்சியடைகின்றேன். கூலி இயந்திரமாக மாறிவிட்ட எம் மக்கள் மத்தியில் சிரிக்கவும் சிந்திக்கவும் ஒரு பொழுது கிடைக்குமானால் அது பெரும் பேறாகவே கருதுகின்றேன். தொடர்ந்தும் சிரித்திரு தனது சேவையை செய்யவேண்டுமென வரவேற்கிறேன். சிரித்திரு வாழ, வளம் பெற, வளர, ஆசிகள்

**வி.ரி.மயிலழகன்**
BEZONS

ஆசிரியர் துரைஸ் அவர்களே சிரித்திருவை இன்னும் கொஞ்சம் இனிப்பூட்டி (அதாவது பொது விஷயங்களான, அறிவுக்களஞ்சியம் என்றோ, அறிவுப்பூங்கா என்றோ, தேன்கூடு என்றோ, விடுபுதிர் என்வற்றை சேர்த்து அதற்கென்று 1-2 பக்கங்களை ஒதுக்கி பிரசுரித்தால் மிகவும் நல்லதாக இருக்கும்)

எனவே இனிவரும் அடுத்தடுத்த "சிரித்திரு"வில் பொது விடயங்களையும் இணைத்து பிரசுரிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

**கி.ரவீந்திரன்**
சுவிஸ்

MR. JUDE
11 PSACE ROGES SELENGRO
95140 GARGES

மிக அண்மையில் தங்கள் பத்திரிகைக்கு ஒரு சிறுகதை எழுதியிருந்தேன். எதிர்பார்த்தபடி பிரசுரிக்காதது மிகவும் வேதனை தொடர்ந்தும் ஆக்கங்கள் எழுதினால் பிரசுரிக்கப்படுமா ? என்ற ஏக்கத்தில் அனுப்பாமல் பெட்டிக்குள் மூடி வைத்திருக்கிறேன்.

சகோதரரே முதல் அனுப்பிய கதை கிடைத்தது. ...'சிரித்திரு' விற்கு பொருத்தமாக இல்லாதமையினால் பிரசுரிக்கவில்லை. உங்களைப் போன்றவர்களுக்காகத்தான் 'சிரித்திரு'. சிரிப்பான சிந்திக்க கூடிய விஷயங்களை இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல் எழுதி அனுப்புங்கள் பிரசுரிப்போம்.

M.P.PARAMESH
இசைக்கலைஞர்
ஜெர்மனி


சிரித்திரு படித்தோம். வயிறு குலுங்க சிரித்தோம். எங்கள் நகரில் உள்ள கடைக்கு நீங்கள் அனுப்பும் புத்தகங்கள் போதாது கூடுதலாக அனுப்பி வையுங்கள்.சிரித்திரு கடையில் இல்லாததால் ஓசியில் படிக்க வருகின்றார்கள்.

## வட்டிக்கார வரதர்




**ஒருவர்** : என்ன மச்சான் விசயம் கேள்விப்பட்டியே எங்கடை வரதர் "நிலத்தோடை தனி வீடல்லே வேண்டியிருக்கிறார்

**மற்றவர்**:என்ன? வங்கியிலை வட்டிக்குக் கடன் எடுத்தே வீடு வாங்கினவர்.




**ஒருவர்**: வட்டிக்கார வரதர் வங்கியிலை வட்டிக்குக் கடன் எடுக்கிற அளவுக்கு வரதர் "தன்ரை கௌரவத்தை விடமாட்டார் வரதரை பொறுத்த மட்டிலை பிரான்சிலையுள்ள வங்கிகள் தான் வரதரிட்டை வட்டிக்கு எடுக்கவேணும். அவர் தன்ரை ரெடி மேற் காசிலை தான் வீடு வேண்டியிருக்கிறார்.

**மற்றவர்**: அப்ப வரதர் காசை கல்லாக்கீட்டாரெண்டுறாய்



**ஒருவர்**: அது மட்டுமே ஐப்பசி மாதம் வீடு குடிபூரலும் செய்யப்போறாராம். வேண்டின வீட்டுக்கு என்ன பெயர் வைச்சிருக்கிறார் தெரியுமே ?



**மற்றவர்**: என்ன தன்ரை பெயரை வைப்பார் இல்லாட்டி மனிசி பிள்ளையளின்ரை பெயரை வைப்பார்.

**ஒருவர்** : வரதர் தொழிலை தெய்வமாக மதிக்கிறவ மனிசன் தனிய வட்டிக்காசிலை வாங்கின வீடெண்டபடியால் வீட்டுக்கு "வட்டி இல்லம்" எண்டு பேர் வைக்கப் போறாராம். - **"லோகு"**-




**இரத்தினம்** : என்ன தங்கராசாண்ணை
முடி வெட்டுறதுக்கு காசை
கூட்டிப் போட்டீங்கள்
**தங்கராசா** : பின்ன என்ன இரத்தினம்
ஆயுதங்கள் எல்லாம் சரியா
விலை ஏறிப் போச்சு நான்
என்ன செய்ய ?
**இரத்தினம்** : ஆயுதங்கள் விலை ஏறிப் போச்சு
தெண்டால் என்ன ரஷ்யா,
அமெரிக்காவில இருந்து
ஏவுகணையே எடுப்பிச்சனீங்கள்
- கிருஷாந்தன்

# கண்டு பிடியுங்கள் எழுதி அனுப்புங்கள்

கண்டு பிடியுங்கள் இந்த இரு படங்களிலும் ஆகக் குறைந்தது ஆறு வித்தியாசங்கள் இருக்கின்றது.







பக்தன் : முருகா! ஞான பண்டிதா! உடுத்தறதுக்கு உருப்படியா ஒரு உடை கூட இல்லாம என்னை இப்படி சோதிக்கிறாயே! இது உனக்கே நல்லா இருக்கா?

பழனி முருகன் : பக்தனே! என் நிலை தெரிந்துமா என்னிடம் வந்து இப்படி முறையிடுகிறாய்?


– சிவகாசி நவநீதன்.

நன்றி : பாக்யா






பேனா நண்பர்
கே.ரவீந்திரன்
ZURICH STR 1
8117 FALLANDEN
SWITZERLAND.






ஒருவர்:-
தொடர்ந்து வைக்கல் சாப்பிட்டு வந்தால் கண்பார்வை ஒருக்காலும் மங்காது தம்பி..

மற்றவர்:-
என்னண்டண்ணை சொல்லுறியள் ?

ஒருவர்:-
மாடு கண்ணாடி போட்டதை எங்கயாவது பாத்திருக்கிறியோ தம்பி ?

மற்றவர்:-
......?......?......?......

-- நந்து --


## பாரிஸ் வீடியோ மலர்

பாரிஸ் வீடியோ மலர் 5ல்
இடம்பெறவிருக்கும்
பாட்டுக்குப் பாட்டு
வேடிக்கை விநோத நிகழ்ச்சியில்
கலந்துகொள்ள ஆர்வம் உள்ளவர்கள்
உங்கள் பெயர்களை
சசி வீடியோ விஷனில்
பதிவு செய்துகொள்ளவும்
64, RUE LOUIS BLANC,
75010 PARIS.
Tel: 40 38 31 78
Mo: LA CHAPELLE ou GARE DU NORD

# பரலோகத்தில் பண்டிதமணி



பண்டிதமணியின் சித்திரை இதழில் இடம் பெற்ற பட்டி மன்ற கலவரத்தால் அகால மரணமடைந்த பண்டிதமணி பரமசிவம் பிள்ளை மேலுலகம் சென்றும் சும்மாயிருக்கவில்லை.

பூவுல வாழ்க்கை சிறந்ததா அல்லது மேலுலக வாழ்க்கை சிறந்ததா என்று ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றை எழுதமுயன்று வருகின்றார். (அங்கும் டாக்டர் பட்டம் பெறுவதற்காகத் தானாம்) இதற்காக பூவலகில் மரணமடைந்து மேலுலகில் இருக்கும் பலரை சந்தித்து பேட்டிகள் எடுத்து வருகின்றார்.

பரமசிவம்பிள்ளை முதன் முதலாக நடிகவேள் எம்.ஆர்.ராதா அவர்களை எமக்கு அனுப்பி வைத்தார். அதனை உங்களுக்கு அப்படியே தருகின்றோம்.

குறிப்பு:-

வாசகர்களே இது உங்களை சிரிக்கவைப்பதற்காக எமது கற்பனையில் எழுதப்பட்டது. திரு. எம்.ஆர்.ராதா அவர்கள் எப்படி கதைப்பார் என நாம் கற்பனை பண்ணி அவருடைய பாணியிலேயே வசனங்கள் அமைத்திருக்கின்றோம். நீங்கள் திரு. எம்.ஆர்.ராதா அவர்களின் பாணியில் படிக்குமாறு வேண்டுகின்றோம்

(ஆ-ர்)

**பண்டிதமணி**: வணக்கம் ராதா அண்ணன் அவர்களே

**எம்.ஆர்.ராதா**: சும்மா ராதா இல்லை எம்.ஆர். ராதா. நான் என்ன அப்பன் இல்லாமல் பிறந்தவனா? அப்பன் பேரை முதல்ல சொல்லி சொல்லணும் புரிஞ்சுதா பண்டாரமணி.

**பண்டிதமணி**:பண்டார மணி இல்லை பண்டிதமணி.

**எம்.ஆர்.ராதா**: ஏதோ ஒரு மணி.

**பண்டிதமணி**: வணக்கம் நடிகவேள் எம்.ஆர். ராதா அவர்களே

**எம்.ஆர்.ராதா**: என்ன மேன் வணக்கம் சொல்லுறே இந்த தமிழ் பீப்பிள்ஸ் திருந்தவே மாட்டாங்க. இரண்டு கையையும் மேலை தூக்கி வணக்கம் சொல்லுறது சீ..ச்சீ...சீ வெள்ளைக்காரனைப் பார் ஹலோ எண்டு சொல்லி ஒரு கையை குடுத்து குலுக்கி விசயத்தை முடிச்சுக்கிறான். அவனுக்கு இரண்டு கையையும் புடிச்சு குலுக்க தெரியாதா ?

எதுக்கு மேன் இரண்டு கையையும் தூக்கி உன் சக்தியை வேஸ்ட் பண்ணுறே. கடவுள் எண்டு சொல்லி கல்லுக்கு முன்னாலையும் நிண்ணு கையைத் தூக்கி வணக்கம் சொல்லுறே. ஏன் மேன் அப்பிடி பண்றீங்க உன்னை கனம் பண்ணுறவனை மதிச்சு வணக்கம் சொல்லு. ஏண்டா கல்லுக்கும் சுவத்துக்கும் வணக்கம் சொல்லி காலத்தை வீணாக்கிறீங்க.

**பண்டிதமணி**: மன்னிக்கவேண்டும் கைகளை கூப்பி வணக்கம் சொல்லுறது எங்கள் தமிழ் பண்பாடு.

**எம்.ஆர்.ராதா**: அதுக்கேன் மன்னிப்பு சொல்லுறே அதுவும் தமிழ் பண்பாடா?


**பண்டிதமணி**: அப்பிடியில்லை நான் தங்கள் மனம் நோகும்படி ஏதாவது கூறிவிட்டேனோ என்று எண்ணித்தான் மன்னிப்புக் கேட்டேன்.

**எம்.ஆர்.ராதா**: இப்ப புரிஞ்சுதா இரண்டு கையையும் தூக்கி வணக்கம் சொல்லுறது தப்பு எண்டு..ஓகே...கம்...ரு..த..பொயின்ற் என்ன மேன் கேக்கப்போறே என் கிட்ட

**பண்டிதமணி**: நீங்கள் பூலோகத்தில் வாழ்வதையா அல்லது இங்கு வாழ்வதையா பெருமையாக நினைக்கிறீர்கள்

**எம்.ஆர்.ராதா**: பூலோகத்திலை வாழ்றவனுக்கு சாவு நிச்சயம் இங்கை வாழ்றவனுக்கு சாவே இல்லை. அது மாத்திரமில்லை இங்கை புறமோசனும் உண்டு. என்ன முழிக்கிறே. மறுபிறப்பு தெரியுமா உனக்கு மறுபிறப்பு. என்னைக் கேட்டாங்கோ இன்னொருவாட்டி பூமியில போய் இருண்ணு நான் தான் மாட்டேன்னுட்டன். இப்ப சொல்லு எங்கை வாழ்றது மேன் பெருமை.

**பண்டிதமணி**:சாவு ஒண்டு இல்லாததாலை மட்டும் தான் இங்கை வாழ்றது பெருமையா?



**ரவி**: இனிமேல் வேலைக்குப் போக சீசன் ரிக்கற் எடுக்கத் தேவையில்லை.

**காந்தன்**: ஏன் ? வீட்டுக்கு பக்கத்தில வேலை மாத்திட்டாங்களாக்கும்

**ரவி**: அப்படி ஒண்டுமில்லை வேலையாலை நிப்பாட்டிப் போட்டாங்கள்...

# பரலோகத்தில் பண்டிதமணி

**எம்.ஆர்.ராதா**: உனக்கு ஆர் மேன் பண்டிதர் பட்டம் தந்தவன் (மெதுவான குரலில்) என்ன காசு குடுத்து வாங்கினியா ? (மீண்டும் பழைய குரலில்) இங்கை ஏழை பணக்காரன் இல்லே.உயர்ந்தவன் தாழ்ந்தவன் இல்லே. மேல்ஜாதி கீழ்ஜாதி இல்லே எல்லாரும் சமத்துவம் இந்தப் பணம் இருக்கே பணம் பூலோகத்தில் பணம் உள்ளவன் எல்லாம் பெரிய மனுசன் ஆயிடுறான். புத்திசாலி ஆயிடுறான். எல்லோரும் சமம். எந்த ஒரு நாட்டிலை பணம் இல்லாம மனுசன் வாழ்றானோ அது தான் உண்மையான சோசலிச நாடு அந்த நாடு இதுதானய்யா.

**பண்டிதமணி**: நீங்கள் பூலோகத்தில் அரசியல் நடிப்பு என்று இரண்டு துறையிலும் பிரபலமாயிருந்தீர்கள். இங்கு என்ன செய்கின்றீர்கள்.

**எம்.ஆர்.ராதா**: அங்கை நடிக்கிறவன் எல்லாம் அரசியல்ல வர்றதுக்காக நடிக்கிறான். அரசியல் பண்ணுறன் மக்கள் கிட்ட நடிக்கத்தான் அரசியல் பண்ணமுடியுது. இங்கை அரசியல் எல்லாம் பண்ணமுடியாது. எலக்சன் வைச்சு சிவபெருமானை மாத்த முடியுமா ? யமனை மாத்தமுடியுமா ? சரி மாத்தியாச்சு எண்டு வைச்சுக்கோ நம்ம கையிலை பவர் வந்தா என்னா நடக்கும். பூலோகத்திலை இருக்கிற கோவக்காரனை எல்லாம் இங்கை கொண்டாந்திடுவீங்க. உங்க சொந்தக்காரங்களுக்கு புரமோசன் கொடுப்பீங்க. அப்புறம் மேல் லோகத்தையும் நாறடிச்சிடுவீங்களே என் அரசியல் குரு தந்தை பெரியாரே கம்முன்னு இருக்கார் எதுக்கையா இங்க அரசியல் பண்ணணும்.

**பண்டிதமணி**:அப்படியானால் நடிப்பு.

**எம்.ஆர்.ராதா**: வேண்டாம்..அந்தத் தொழில் வேண்டாம் போட்டி பொறாமை வஞ்சகம் சூது நிறைந்த தொழில் நடிப்புத் தொழில். கண்ட உடனை அண்ணா எண்டு கட்டிப்புடிப்பான். ஆனால் இவனை எப்படியடா கவுக்கிறது என்று தான் யோசிச்சுக்கொண்டிருப்பான். இந்தப் பொட்டச்சீங்க மட்டும் என்னா பண்றாளவை. அந்த நடிகை போட்ட கவுணைவிட சின்னக்கவுணா போட்டு நடிச்சு அவளைவிட நான் தான் வடிவு அப்படீன்னு போஸ் குடுத்து முன்னுக்கு வர பாப்பாளுவ.நடிக்க மாட்டாளுவ. நடிக்க வந்தவுடனே வாழ்க்கையிலும் நடிக்கத் துவங்கிடுவாங்க.. அதனாலை தான் சொல்லுறன் வேணாம்..இந்த நடிப்புத் தொழில் வேணாம்.

**பண்டிதமணி**: உங்களுடைய நண்பர்கள் எதிரிகள் எல்லாம் இங்கு வந்திருக்கின்றார்களே அவர்களை நீங்கள் சந்திப்பதுண்டா?

**எம்.ஆர்.ராதா**: யார் மேன் நண்பன் ! யார் மேன் எதிரி ! எனக்கு நண்பனும் இல்லே எதிரியும் இல்லே.

**பண்டிதமணி**: நீங்கள் சுட்டுக் கொல்ல முயற்சித்த எம்.ஜி.ராமச்சந்திரன் இங்கு தானே இருக்கின்றார். அவரைச் சந்தித்ததுண்டா?

**எம்.ஆர்.ராதா**: யார் மேன் சொன்னது நான் சுட்டது கொல்லத்தான் எண்ணு. ராமச்சந்திரன் என் உடன்பிறவாத தம்பி அவனும் என்னை காணும்போதெல்லாம் நான் முன்ன சொன்னமாதிரி அண்ணா எண்டு கட்டிப்பிடிப்பான். ஆனா எனக்குத் தெரியும் இவன் ஏன் கட்டிப்பிடிக்கிறானென்னு. கட்டிப்பிடிக்கிற மாதிரி பிடிச்சு என்னைத் தள்ளி விழுத்தலாமா எண்டு டெஸ்ட் பண்ணிப் பாப்பான். அவனாலை முடியல்லை அவன் தான் என்னை தன் வீட்டுக்கு கூப்பிட்டான். அவன் தான் என்னை கொல்லப் பார்த்தான். நான் தற்பாதுகாப்புக்காக துப்பாக்கியை பாவிச்சன். நீ என்னடா எண்டா நான் கொல்லுறதுக்காக றை பண்ணினேங்கிறே. கொல்லுறதுக்காக நான் சுட்டேண்ணா அவன் தப்பமாட்டான். நாங்க அண்ணன் தம்பி சும்மா அடிச்சிட்டம். அதை பெரிசு பண்ணி என்னை ஜெயிலிலையும் வைச்சாங்க அதை வுடுமேன் கம் ரு த பொயின்ற்

**பண்டிதமணி**: இங்கு அவரை நீங்கள் சந்தித்ததுண்டா?

**ராதா**: சந்திச்சேன் என்ன பிரயோசனம் அவனாலை கதைக்க முடியல்லை. சாவுறவன் கொஞ்சம் இளமையான காலத்திலை செத்திருக்கக்கூடாதா ? இங்க வரும் போதே நடக்கவும் முடியாமை கதைக்கவும் முடியாமைவாறான். இருந்தாலும் நான் அங்கையும் சரி இங்கையும் சரி அவனுக்கு சீனியர் அந்த மரியாதையை தாறான். என்னைக் கண்டா கையெடுத்து கும்பிடுறான். ஆனா எதுக்கு கும்பிடுறான்னு சில வேளை எனக்குச் சந்தேகமா இருக்கு என்னை மன்னிச்சிடுன்னு கும்பிடுறானா அல்லது இரு இரு உன்னை அப்புறமா கவனிக்கிறேன்னு கும்பிடுறானா எண்டு தான் தெரியல்ல.

## தொடர்ச்சி பக்கம்.........



**அம்மா**: என்ன மகன் இதோட ஏழு செம்பு தண்ணி தந்திட்டன் என்ன ? விளையாடிக் கொண்டிருக்கிறாயா?

**மகன்**: இல்லை அம்மா எங்கட கட்டில்ல உள்ள உடுப்பெல்லாம் தீப்பிடிச்சு எரியுது அதை அணைக்கத்தான் தண்ணி கொண்டு போறன்






**வீட்டுமருத்துவம்**
பொன்னாங்காணி

வேறுபெயர் : பொன்னாங்காணி, சீதை

இதன்குணம்: கண்நோய்களைப் போக்கும்.
வாததோஷம் நீங்கும்.
மூல நோயை குணமாக்கும்.
உடற் சூட்டைத் தணிக்கும்.
உடலைப் பொன்னிறமாக்கும்.

பொன்னாங்கண்ணி கற்பக மூலிகையென மருத்துவர்களால் கருதப்படுகிறது. சகலவித நோய்களுக்கும் இந்தக் கீரையை உணவாக உண்ணலாம். இது ஒரு வகையான கொடிக்கீரையாகும். எங்கும் பயிராகக்கூடியது. இக்கீரையின் பெயரே இதன் குணத்தைச் சுட்டுவதாக அமைந்துள்ளது. இக்கீரையை உண்போரின் கண்பொன் போன்று ஒளிவிடுமென்றும் (பொன் + ஆம் + கண் + இ) இதனை உண்டால் உன் உடல்பொன்னாகக் காண்பாய் (பொன் + ஆம் + காண் + நீ) என்றும் இதற்குப் பொருள் கூறுவாரும் உளர்.
உணவாக உண்ணப்படும் கீரை வகைகளில் பொன்னாங்கண்ணி ஒரு சிறந்த இடத்தைப் பெறுகிறது. உணவாகப் பயன்படும் அதே வேளையில் உடலுக்கும் சிறந்த சக்தியை அளிக்கிறது. இதில் உயிர்ச்சத்து ஏ.பி.சி. என்பனவும், தாதுப்புகளும், மாவு, புரதப்பொருட்களும், சுண்ணாம்புச் சத்தும், மணிச்சத்தும், அயச்சத்தும் அடங்கியுள்ளன.
பொன்னாங்கண்ணிக் கீரை கண்நோய்களை போக்கவல்லது. . பொன்னாங்காணி இலையை மட்டும் எடுத்து உப்பில்லாமல் வேகவைத்து பசுவின் வெண்ணெயைச் சேர்த்து சமைத்து 40 நாட்கள் வரை உண்டால் கண்ணில் உண்டாகும் பிணிகள் தீரும். நெய்விட்டு வதக்கி கண்களுக்குக் கட்ட வாத, கப சம்பந்தமான கண் நோய்கள் நீங்கும்.
இக்கீரையைச் சுத்தம் செய்து பச்சையாகவே சிறிது எடுத்து (ஒருகைப்பிடி) வாயில் போட்டு மென்று விழுங்க வாய்ப்புண், தொண்டைப்புண் ஆகியன நீங்கும். இக்கீரையுடன் வெள்ளைப் பூடு நிறையச் சேர்த்து எண்ணெய்விட்டு வதக்கி சோற்றுடன் பிசைந்து 48 நாட்கள் தொடர்ந்து உண்டுவர மூலநோய்கள் குணமாகும்.
பொன்னாங்கண்ணிக் கீரையை தினந்தோறும் சாப்பிட்டால் வாய்நாற்றம், வாய்ப்புண் போன்றன நீங்குவதோடு ஈரல்நோய், மூலரோகம், கைகால் எரிச்சல், வெள்ளைபடுதல், வயிற்றெரிச்சல் போன்றனவுங் குணமாகும்.
தினந்தோறும் இக்கீரையைத் துவட்டி உண்டுவர உடல் ஒளிபெறும். இக்கீரையிலிருந்து எடுக்கப்படும் தைலம் ஒரு சிறந்த மருந்தாகும். இத்தைலத்தால் தலைமுழுகிவர கண் நோய்களும் அழல்நோய்களும், சருமநோய்களும் நீங்கும்.
பொன்னாங்கண்ணிக் கீரை உணவாகவும் மருந்தாகவும் பயன்படுவதால் தினசரி உணவில் அதனைச் சேர்த்துக் கொள்வது அவசியமாகும்.

**- டாக்டர் வி.ரி.இளங்கோவன்**
முன்னாள் ஐ.நா. தொண்டர் - (மூலிகை மருத்துவம்) பிலிப்பைன்ஸ்



**தயாரிப்பாளர்**: பிச்சைக்காரன் வேஷத்திலே நடிக்கறதுக்கு ஆள் கிடைக்கலையே. என்ன பண்றது ?


**டைரக்டர்**: பேசாம நீங்களே நடிச்சிடுங்களேன் !! உங்களுக்கும் முன் அனுபவம் கிடைச்ச மாதிரி இருக்கும் !!!

**- நேசன்**

## பண்டிதமணி.... உம்பக்க தொடர்

**பண்டிதமணி**: கடைசியாக ஒரு கேள்வி இந்தப் பேட்டி பூலோகத்து பத்திரிகைகளில் வெளிவரும் என்பதால் கேட்கிறேன் பூலோகத்து மக்களுக்கு ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?
**எம்.ஆர்.ராதா**: நிறைய சொல்லணும். ஆனால் நான் சொல்லமாட்டேன். சொன்னா என்ன கேக்கவா போறாங்க. இருந்தாலும் ஒண்ணு சொல்லுறன் சாவுறவன் எல்லாம் கெதியா செத்துட்டு இங்கை வந்திடுங்க கிழவனாய் போய் நடக்கமுடியாமை கதைக்கமுடியாமை இங்கை வராதீங்க. இது தான் உலகத்திலேயே சமத்துவமான சோசலிஸ நாடு. எவனாவது அரசியல்வாதி இங்கை வந்து நாசம் பண்ணுறதுக்கு முன்னாடி எல்லோரும் வந்திடுங்க எண்டு எழுது.
**பண்டிதமணி**: நன்றி ராதா அண்ணன் அவர்களே
**எம்.ஆர்.ராதா**: பாத்தியா காரியம் முடிஞ்சதும் புத்தியை காட்டுறியே
**பண்டிதமணி**: நீங்கள் என்ன சொல்லுகின்றீர்கள்.
**எம்.ஆர்.ராதா**: அப்பன் பேரை திரும்பவும் விட்டிட்டியே
**பண்டிதமணி**: நன்றி நடிகவேள் எம்.ஆர்.ராதா அவர்களே .
**எம்.ஆர்.ராதா**: இந்த தப்புக்கெல்லாம் மன்னிப்பு கேட்கமாட்டீங்களோ?
(பண்டிதமணி மன்னிப்புக் கேட்க வாயெடுக்க)
**எம்.ஆர்.ராதா**: வேண்டாம் போ....சீக்கிரமா போ
(பண்டிதமணி பரமசிவம்பிள்ளை திரும்பிப் பார்க்காமல் இடத்தை காலி பண்ணுகின்றார்.)

மாதம் ஒருமுறை
மலரும் 'சிரித்திரு'
சிரிக்க சிந்திக்க
உங்களை அழைத்துச் செல்லும்
கலையார்வம் கொண்ட
உங்கள் தோழன்




**ஆனந்தன்** : என்ன கோபால் வீட்டுக்குள்ள ஆடிக்கொண்டிருக்கிறாய்.

**கோபால் மனைவி**: அவர் வீட்டுக்கு கடிதம் எழுதுறார்.

**ஆனந்தன்**: அதுக்கு ஏன் பிள்ளை நீ பிடிச்சு ஆட்டிறாய்

**கோபால் மனைவி**: இல்ல....அவர் இலங்கையில C.T.Bகொண்டக்டராக இருந்தவர். ஆராவது அவரைப் பிடிச்சு ஆட்டினாத்தான் அவரால வடிவா எழுதமுடியும்.



**மோகன்**: ஏன் இந்த முறை 'சார்த்துக்கு' நடந்து போக நீர் வரேல்லே


**ராஜன்**: இந்து முறை சாட்டுக்கு நடக்க எனக்கு விருப்பமில்லை அதுதான் வரேல்ல.

**மோகன்**: கோவில் விஷயத்தில நீர் இப்பிடி சொல்லலாமே...

**ராஜன்**: பின்ன என்ன..'சார்த்' துக்கு நடக்கலாம் சும்மா சாட்டுக்கு நடக்கேலாது.

அசரீரி....ரஜனி ஸ்ரைலில்.......

வளரும் பயிரை முளையிலே தெரியுது
சிகரட் புகையில
வட்டம் வருகுது.....
இது எப்படி இருக்கு ...



**வேலுப்பிள்ளை** : கந்தையா அண்ணை, அங்க பாருங்கோ என்ன நடக்குதெண்டு...கனகசிங்கத்தாற்ர கடக்குட்டி இப்ப வாற படங்களைப் பார்த்திட்டு ரஜனிகாந்த் ஸ்ரைலில சிநேகிதர் மாருக்கு அறிவைப் பரப்புது.

**கந்தையா** : காலம் தான் தம்பி..?



'சிரித்திரு'
பிரெஞ்சு - தமிழ்
கலைஞர்கள் நட்புறவு
பணிமனை வெளியீடு

மறக்கமுடியுமா?

# மறக்க முடியுமா?

பெண் அடிமை பற்றி சற்று அதிகமாகவே எழுதியிருக்கிறேன் நான்.
சில பெண்களே என்னிடம் கேட்கின்றார்கள். "நாங்கள் அடிமைகள் என்று யார் சொன்னது. நீங்கள் ஏன் அப்படி எழுதுகின்றீர்கள்" என்று.
இவர்கள் வெளிநாடுகளில் வாழ்பவர்கள். அதனால்தான் இப்படி கூறுகின்றார்கள் என்று அவர்களின் கருத்தை நான் ஒதுக்கிவிடவில்லை.
சிந்தித்தேன் பெண் அடிமைத்தனம் ஒழிந்து விட்டதா என்று.
கல்வி அறிவு போதியளவு இல்லாத கிராமங்களில் சிலசமயம் பெண்களுக்குரிய கௌரவத்தை வழங்காமல் இரண்டாம் தர பிரஜையாக நடத்தப் படலாம். ஆனால் கற்றோர் மத்தியில் அப்படி நடக்கின்றதா ? கூறுங்கள் என்றார்கள்.
அண்மையில் சென்னையில் ராஜேஸ்வரி என்ற பெண் டாக்டர் (வயது 30) அவரது கணவர் ஜெயமணி (வயது 35) யால் எரித்து கொலை செய்யப் பட்டதாக பத்திரிகைகளில் படித்தோம். இதில் வேடிக்கை என்னவென்றால் அவள் கணவரும் டாக்டர். எரிக்கப்பட்ட காரணம் மனைவியின் சொத்துக்களை கணவன் பெயருக்கு மாற்றிக் கொடுக்காதமையேயாகும்.
இவர்கள் படிப்பறிவில்லாதவர்களா ? கிராமவாசிகளா?
இப்படி எங்காவது ஒன்று நடந்திருக்கலாம் என்று இவர்கள் கூறலாம்.
படித்த பெண்களும் மேலைநாடுகளில் வாழும் பெண்களும் தாங்கள் சுதந்திரம் அடைந்த வீராங்கனைகள் என்று கூறுகின்றார்களா ?
பெண்கள் அழகுசாதனங்கள் இல்லை ! பெண்கள் பிள்ளை பெறும் இயந்திரம் இல்லை! என்று சொல்லப்படுவதும் உண்மைதான்.
இவர்களை பொறுத்தவரை இந்த விடுதலை ஆண்களிடத்தில் இல்லையே.

இவர்கள் முதலில் தங்களுக்கு தாங்கள் போட்டிருக்கின்ற விலங்கை தாங்களே உடைக்கவேண்டும் நான் விலங்கு என்பது தங்களைப் பற்றி அவர்கள் கொண்டிருக்கின்ற எண்ணங்களே !
ஒரு ஆண்மகன் தன்னை அலங்கரித்துக் கொள்ள ஐந்துநிமிடம் செலவு செய்தால் ஒரு பெண் தன்னை அலங்கரித்துக்கொள்ள அரை மணி நேரத்திற்கும் மேல் செலவிடுகின்றாள்.
இது எல்லா பெண்களிடமும் இருக்கின்ற பழக்கம்.
இந்தப் பெண்கள் தங்களை தாங்களே ஆடம்பரப் பொருளாக கருதிக் கொண்டிருக்கின்றார்கள்.
தன்னை மற்ற பெண்களைவிட அழகாக அலங்கரிப்பதில் இவளுக்கு அதிக ஆனந்தம்.
இவர்களின் மனங்களில் அனைவருடைய பார்வையும் தங்கள் மேல் இருக்கவேண்டும் என்று விரும்புவதாகவே எனக்கு தோன்றுகின்றது.
இந்தப் பெண்கள் தாங்கள் அழகுப்பொருள், ஆடம்பரப்பொருள், போகப்பொருள் என்று தாங்களே எண்ணிக்கொண்டிருக்கும் இந்த விலங்கை முதலில் அவர்களே உடைக்கவேண்டும்.
இன்றும் கூட பட்டணங்களிலும் கிராமங்களிலும் வாழ்கின்ற எல்லாப் பெண்களும் அடிமைகள் தான். இதனை மறுக்கமுடியுமா ? இந்தப் பெண்களின் அவல வாழ்வை மறக்கமுடியுமா ?

'நாணமோ இன்னும் நாணமோ'





பெண்ணின் தகப்பன்.:
"காணு மோ இன்னும் வேணுமோ"

நன்றி: குமாரத்தனபால்

பாரிஸ் நகரில் தொடரும் எமது சேவையில்
மற்றுமொரு புதிய ஸ்தாபனம்



'டிஸ்னி'

உங்கள் புன்னகைக்கு
இணையான
பொன் நகைகளுக்கு
இன்றே வருகை தாருங்கள்

'டிஸ்னி'

உரிமையாளர் எல். புவனேந்திரன் (இந்திரன்)
70, Rue Louis Blanc
75010 Paris Tel: 40 36 16 23
M° : La Chapelle Fax: 40 36 16 32

சிங்கப்பூர்,
பாங்கொக்கில்
உங்கள் உறவினர்களா?

டிஸ்னி நகைமாளிகை

உங்கள் உறவினர்கள் யாரேனும்
சிங்கப்பூர், பாங்கொக் நகரில்
நின்று தவிக்கின்றார்களா?
அவர்களுக்கு ஏதேனும் வழியில்
உதவவேண்டுமா?
கவலையை விடுங்கள்
உடனே தொடர்பு கொள்ளுங்கள்.



டிஸ்னி
நகைமாளிகை

DISNEY JEWELLERY

(1) 40 36 16 23

(காலை 10 மணி முதல் மாலை 8 மணிவரை)


காயத்திரி, காயா ஆதரவில் சுமித்ரா, காந்தி வழங்கும்
கவர்ச்சித் தாரகை சில்க் சுமிதா நகைச்சுவை செல்வர் எஸ்.எஸ். சந்திரன் பாடகி சாதனா
முன்னணிப் பாடகர் மனோ பலகுரல் மன்னன் தாமு
குஷ்பு
ஐரோப்பாவில் முதல் தடவையாக கலந்துகொள்ளும்
சுமித்ரா - காந்தி ஸ்தாபனத்தாரின் ஐந்தாவது
இனிய இன்னிசை மாலைப் பொழுது
விபரங்களுக்கு:
சுமித்ரா
43 55 91 02
காந்தி
42 59 78 89
காயத்திரி
42 09 22 43
காயா
42 26 38 97
அகிலன்
42 05 30 40
மற்றும் 25 திரை இசைக் கலைஞர்கள் கலந்துகொள்ளும்
'இனிய இன்னிசை மாலைப் பொழுது'
பாரிஸில் 09. 08. 92 ஞாயிறு மாலை